887

887
4-57

ஸ்ரீ நருஸிம்ஹ ப்ரியா

16-4

OFFICE OF ... REGISTRAR OF BOOKS
27 NOV 1957
MADRAS



ஸ்ரீ தேவநாதன்
[திருவயிந்தை]

3L
M57 16.4.
210738

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 76
2. கடன் 79

[ஸ்ரீ. உப. வித்வான், நடாதூர், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

3. மஹாவீரவைபவம் 83

[ஸ்ரீ. உப. வித்வான், பாதூர், ஸரளகவி, ராகவாசார்ய ஸ்வாமீ, வ்யாகரணாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

4. ஹம்ஸஸந்தேசம் 89

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

5. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 92
6. சாரீரகார்ச்சனை 97
7. பெரியோர்கள் பக்கலில் - 4 101

[ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

8. பஞ்சாங்கஸங்க்ரஹம் 103

இம்மாதம் அட்டையில் அச்சிட ஸ்ரீ தேவநாதன் ப்ளாக்கைக் கொடுத்துதவிய விட்டில் ப்ளவர் கம்பெனியாருக்கு நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பம்பாய் சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

பம்பாயிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நமது பத்திரிகைக்கு கௌரவ ஏஜண்டாக இருக்க நாம் நேரில் ப்ரார்த்தித்ததின் பேரில் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் P. R. ஸௌந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி இசைந்துள்ளார். ஆகையால் பம்பாய் சந்தாதாரர்கள் அவரிடம் தங்கள் சந்தாபாக்கியையும் இவ்வருஷச் சந்தாவையும் செலுத்தலாமென்று ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீஸந்நிதியில் ப்ரகாசிக்கும் புத்தகங்கள் இவரிடம் கிடைக்கும்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ஹு சித்திரை மீ { ஸஞ்சிகை 4

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌗𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

உலகில் பலவிதமான சமயங்கள் தோன்றியுள்ளன. ஒவ்வொரு சமயத்திலும் முக்கியமான கொள்கைகள் காணப்படுகின்றன. இக்கொள்கைகள் ஆத்மபரமாகவும், சரீரபரமாகவும் அமைந்திருக்கின்றன. பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் ஆனவை சரீரங்கள். இச்சரீரங்களில் நமது கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கக்கூடியது ஒருவித சக்தி. இதைத்தான் சரீரி, ஜீவன், என்றெல்லாம் கூறுகிறோம். இவைகளில் முக்கியமானது ஜீவன்தான். அதுதான் அழியாதது. பரமாத்மாவிடம் லயித்திருப்பது. சரீரங்கள் அழியக்கூடியவை. ஆகவே ஒரு மதத்தில் ஆத்மஸம்பந்தமான கொள்கைகள்தான் முக்கியமானவை. சரீரஸம்பந்தமான கொள்கைகள் அப்ரதானமானவை. எப்படி உலகில் சரீரம் இல்லாத ஜீவனை நாம் காணமுடியாதோ, அதேபோல் சரீரஸம்பந்தமான கொள்கைகளை நாம் புறக்கணித்துவிட்டு ஜீவன் அல்லது ஆத்மஸம்பந்தமான கொள்கைகளை மட்டில் நாம் கணக்கிடமுடியாது. இதனால்தான் ஒவ்வொரு மதத்திலும் காணப்படும் கொள்கைகளை இரு பிரிவாக நாம் பிரிக்கலாம். ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டவைகளே. ஒன்றைப் பிரித்தால் மற்றொன்று கெடும். ஜீவன் அற்ற சரீரம் அழுகி நாற்றமெடுக்கும். களையை இழந்ததாகும். அருவருப்பைக் கொடுக்கும். சரீரம் நசித்தால் ஜீவன் நிலைத்திருக்காது. சரீரம் ஒரு ஊன்றுகோலாகிறது. இந்த ஊன்றுகோல் கெட்டால் வேறு ஊன்றுகோலைப் பற்றும். அல்லது பேரூன்றுகோலாகிய பகவானைப் பற்றும்.

உலகில் எந்த சமயமானாலும் இம்மாதிரியான அடிப்படைத் தத்துவங்களைப் பின்பற்றாமல் நிலைக்க முடியாது. இத் தத்துவங்களை உணரமுடியாத பலர் ஆத்மதத்வவிசாரமும் சரீரஸம்பந்தமான கர்மாநுஷ்டானங்களும் ஸம்பந்தமற்ற தத்துவங்கள் எனக் கூறுவதை நாம் காண்கிறோம். இவர்களுடைய தத்துவக் கூற்றுகளை நாம் என்னென்று கூறுவது? இவர்களுடைய கருத்துக்களை நாம் என்னென்று புகழுவது?

புனிதமான இந்துமதத்தில் உள்ள அர்ச்சாவதார வைபவங்களையும், ஜைனமதத்திலுள்ள பஸ்திகளையும், பௌத்தமதத்திலுள்ள விஹாரங்களையும், கிருஸ்துவ மதத்திலுள்ள மாதா கோவில் சிலுவைகளையும், முகம்மதிய மதத்திலுள்ள மசூதிகளையும் அகற்றிவிட்டால் ஸம்பந்தப்பட்ட அந்த மதத்தையே அகற்றியதாகத்தான் கருதவேண்டும். இம் மதங்களினடிப்படைத் தத்துவங்களை ஆத்மதத்துவ விசாரங்களில் பல்வேறு ஒற்றுமைகளை நாம் காணமுடியும். ஆனால் வெளிப்படைக் கொள்கைகளில் பலவித மாறுபாடுகளையும் நாம் காண்கிறோமல்லவா?

கையில் கங்கணமும், சிகையும் இல்லாத சிக்கியனைக் காண முடியுமா? கண்டாலும் அவன் உண்மையான சிக்கியனாவானா? சிலுவையை கௌரவிக்காத கிருஸ்தவன் இருக்கமுடியுமா? அதேபோல் சிகையும், நெற்றிக் குறியும் இல்லாதவன் இந்து மதத்தைப் பின்பற்றுபவன் ஆவானா? இவைகளையெல்லாம் விவேகத்துடன் அறியக்கூடிய தன்மை நமக்கிருந்தும், நாம் அதை உபயோகிக்காமல் தடுமாறுகிறோம். ஆத்மதத்வ விவேகத்துக்கு உபயோகப்படக்

கூடியவைதான் ஒவ்வொரு மதத்தினரும் ஏற்படுத்திக்கொண்ட சரீரஸம்பந்தமான தர்மங்களுங்கூட. இவைகள் இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்தவைகளே. ஆத்மஜ்ஞானம் என்பது ஒன்று, வெளித்தோற்றம் என்பது வேறொன்று என்று இக்காலத்தில் பலர் கூறுகிறார்கள். இவர்கள் எந்த மதத்தையும் பின்பற்றுபவரல்ல. தங்களுடைய கருத்தையே முக்கியமாகக்கொண்டு தாங்களாகவே வகுத்துக்கொண்ட மதத்தைச் சேர்ந்தவர்களேயன்றி புராதனமான எம்மதத்திலும் உட்பட்டவராக மாட்டார். மனது சுத்தமாக இருத்தல் வேண்டும். வெளித்தோற்றம் எப்படியாயினும் சரி என்று கூறும் நவீனத்தவர்கூட உண்மையான மதப்பற்றுள்ளவர்களாயின் அயலாருக்குத் தெரியாமல் பல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர்.

ஆத்மதத்துவஜ்ஞானத்தைப் புகட்டும் மதாசார்யர்கள் கூட சரீரஸம்பந்தமான கர்மாக்களையும் முக்கியமென்று கூறுகிறார்கள். உலகம் அஸத்யம், நாமே ப்ரஹ்மம் என்று கூறும் மித்யாவாதிகள்கூட உலகில் உள்ளவரையில் நாம் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி விஸ்தாரமாக உபதேசிக்கின்றனர். உலகில் இம்முறைகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் எனவும் கூறுகின்றனர். இது நம் நாட்டில் மட்டில் உள்ள நிலை எனக் கூறவேண்டாம். எல்லா நாட்டிலும், எக்காலத்திலும் இருந்த இருக்கக்கூடிய நிலைதான். புராதன மூடப் பழக்கங்கள் என்று கூறுபவர்கள்கூட இம்மாதிரிப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர் என்பது உலகமறிந்த உண்மை. இப்பொழுதும் கருப்புப் பூனை குறுக்கிடுவது சுபசகுனம் எனக் கருதும் மேனாட்டினர் உண்டு.

இம்மாதிரி நிலையில்தான் நம் நாட்டில் சிலர் இது ஸமயம் கூறுகிறார்கள், ‘பிராம்மணர்களை நாங்கள் வெறுக்கவில்லை, பிராம்மணீயத்தை ஒழிக்க விரும்புகிறோம்’ என்று. பிராம்மணீயம் இல்லாதவன் பிராம்மணனா? என்று யோசித்தல் அவசியம். உலகில் எல்லா மதத்தினராலும் அவசியம் என்று கூறப்பட்ட சரீரஸம்பந்தமான தர்மங்களைப் புறக்கணிக்கமுடியுமா? இவைகளும் ஆத்ம தத்துவங்களைப் போலவே முக்கியமானவைகள்தானே. அந்த:கரணசுத்தி வேண்டும், வெளி வேஷங்கள் வேண்டியதில்லை என்றும், அவைகள் முக்கியமானவைகளில்லை என்றும் கூறுகிறார்களே, அதன் உண்மை தான் என்ன என்று நாம் யோசிக்கிறோமா? இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் எம்மாதிரி உலகவாழ்க்கையில் நடந்துகொள்ளவேண்டும், உலகவாழ்க்கைக்குப் பின்னர் பேரின்பத்தையடைய எக்கார்யங்களைச் செய்யவேண்டும் என்றெல்லாம் முற்காலத்து ரிஷிகளும் பூர்வாசார்யர்களும் எடுத்துரைத்திருக்கிறார்கள். அவைகளை நாம் அனுஷ்டித்தல் நமது மதத்திற்கடிப்படையல்லவா? இவைகளை விட்டுவிட்டால் நமது மதத்தை நாம் பின்பற்றுகிறவர்களாக மாட்டோம். நாமாக ஒரு புதிய மதத்தைப் பின்பற்றுகிறவர்களாக ஆவோம்.

இம்மாதிரி செய்கையை ஆதரித்தல் அவசியம் என சீர்திருத்தவாதிகள் கூறலாம். ஆனால் மதத் தலைவர்கள் கூறுவார்களா? மானத்தைக் காப்பாற்ற ஆடைகள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் இம்மாதிரி கர்மானுஷ்டானங்கள், மதத்தைக் காப்பாற்றுவதற்கு; ஆத்மதத்துவஜ்ஞானத்தைக் காப்பாற்றுவதற்கு. நமது கர்மானுஷ்டானங்களை வெறுப்பதென்பது நமது மதத்தையே ஒழிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முதல் நடவடிக்கையாகும்.

கடவுள் உண்டு, நாங்கள் உணர்கிறோம். ஆனால் புராதனகட்டுப்பாடுகளுக்கு நாம் செவிசாய்க்க வேண்டியதில்லை, நாம் அடிமையாக இருக்க வேண்டியதில்லை என்றெல்லாம் கூறுபவர்கள் கடவுளுக்கென்று தாங்கள் செய்யும் தொண்டுதான் என்ன? ஸமூஹத்தின் முன்னேற்றத்திற்குத் தாங்கள் செய்யும் பணிதானென்ன? என்று எண்ணிப் பார்க்கட்டும். மனம் போனபடி பேசுவதும், வாதம் செய்வதும் தனக்கோ, ஸமூஹத்திற்கோ நன்மை செய்வதாகாது. தானும் ஒரு கட்டுப்பாட்டுடன் இருந்து ஸமூஹமும் சில கட்டுப்பாடுகளு

டன் இருக்க உதவுகிறவனே தன்னையும் ஸமூஹத்தையும் காப்பாற்றுகிறவன் ஆவான். மற்றவர்கள் தங்களையும் கெடுத்துக்கொண்டு ஸமூஹத்தையும் கெடுத்தவர்கள் ஆவார்கள்.

ஸம்ஸ்க்ருதத்தை ப்ரசாரம் செய்யவேண்டும் எனக் கூறிக்கொண்டுவரும் ஸம்ஸ்க்ருதாபிமானிகள் ஸம்ஸ்க்ருதத்தை ஸுலபமாக்கவேண்டும், க்ரியாபதங்களை சுலபமாக்க வேண்டும், பரஸ்மைபத, ஆத்மநேபதங்களை ஒன்றாக்க வேண்டும், பேசுவதற்குத் தகுந்தபடி சொற்களின் அமைப்பை ஸுலபமாக்கவேண்டும் என்றெல்லாம் கூறுபவர்கள் உண்மையான ஸம்ஸ்க்ருதாபிமானியாவார்களா? அவர்கள் சொல்லும் கருத்துக்களைக் கடைப்பிடித்தால் புதிதான ஒரு ப்ராக்ருதபாஷையோ, அபப்ரம்சம் போன்ற பாஷையோதான் ஏற்படுத்தியதாக ஆகும். ஹிந்தி போன்ற பாஷைகள் இவ்விதம் ஏற்பட்டவைகள்தானே. அதேபோல்தான் நமது புராதன ஆசாராநுஷ்டானங்களைப் புறக்கணித்தால், நாம் இந்துமதத்தை வேரூன்றியதாகச் செய்ய முடியாது. புதிதாக உயிரில்லாத ஒரு மதத்தை ஏற்படுத்தியவர்களாக ஆகலாம். இதை மதம் என்று கூறுவதுகூட முறையல்ல. ஒரு புதிய ஸமூஹம் எனக் கூறலாம். நாளடைவில் இதிலும் சில புதிய கட்டுப்பாடுகள் ஏற்படும். ஆகவே கட்டுப்பாடில்லாத ஒரு ஸமூஹம் என்பதை நடைமுறையில் நாம் காண முடியாது.

ஒவ்வொருவனும் வர்ணாச்ரமதர்மங்களுக்குத் தகுந்தபடி நித்ய நைமித்திக கர்மாநுஷ்டானங்களைச் செய்துகொண்டுவந்து, பகவானை பக்தியினால் பஜித்து, அல்லது பகவானிடம் சரணடைந்து நற்கதி அடையலாம் என்பது நமது ஸித்தாந்தம். அப்படியிருக்க வர்ணாச்ரமதர்மங்கள் கல்பிதங்கள் என்று சொல்லி அவைகளைப் புறக்கணித்தால் நாம் என்ன விதமான மதப்பற்றை உடையவர்களாகிறோம்? வர்ணாச்ரமதர்மங்களின் அடிப்படைகளில்தானே இதர உபாயாநுஷ்டானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அடிப்படைகள் சிதறினால் மேல்கட்டடமும் சிதறுமல்லவா? மேனாட்டிலுள்ள கிருஸ்துவ மதங்களையும் எடுத்துக் கொள்வோம். அபராதக்ஷமாபணம் செய்தல், பச்சாத்தாபப்படுதல் போன்ற காரியங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இவைகளைச் செய்யாதவன் கதியற்றவனாகிறான். இம்மதங்களில் சேராதவர்களுக்கு உயர்கதி இல்லையென்றுகூட அவர்கள் கூறுகின்றனர். நாம் அப்படிக் கூறவில்லை. நமது மதம் விசாலமான நோக்குகளை உடையது. எவராயினும் தங்கள் நிலைக்குத் தக்கவாறு தர்மாநுஷ்டானங்களைச் செய்துகொண்டிருந்து, பகவத்பக்தியிலீடுபட்டுப் பிறகு நற்கதியையடையலாம் என்பதே. ஆகவே எவருக்கும் நற்கதி மறுக்கப்படுவதில்லை முகம்மதிய மதத்திலும் கிருஸ்துவ மதத்திலும் தங்கள் மதத்திலுள்ளவர்களுக்குத்தான் நற்கதியுண்டு என்று கூறப்படுகிறது. இம்மாதிரியான குறுகிய மனப்பான்மையில்லாத நமது மதத்தில் காணப்படும் அடிப்படைத்தத்துவங்களை ஏன் வெறுக்க வேண்டும்? சரீரத்தில் வியாதி வாராமல் தடுக்க சுகாதார வழிகளைப் பின்பற்றுகிறோம். கிராமங்கள், நாடு, நகரங்கள் செழிப்புற்றிருக்க சுகாதாரவிதிகளைப் பின்பற்றுகிறோம். இதில் எவ்வளவு க்லேசமும், கட்டுப்பாடும் அவசியமாகிறது. இவைகளை ஏற்றுக்கொள்வதால்தானே வியாதியைத் தடுக்கிறோம். அப்படிக்கின்றி கண்டவிடங்களிலெல்லாம் மலஜலங்களைக் கழிப்பது ஸுலபம் என்று ஏன் செய்யக்கூடாது? செய்கிறோமா? பார்ப்பதற்கு அருவருப்பாக இருப்பதாகக் கூறுவார்கள் சிலர். மத்திய இந்தியாவிலும், வட இந்தியாவிலும் ரயில்வண்டிகளையும் பொது நிலையங்களையும் எவ்வளவு அசுத்தமாக வைத்திருக்கின்றனர் அவ்விடத்திய மக்கள் என்பது பார்த்தவர்களுக்குத் தெரியும். அது அருவருப்பைக் கொடுப்பதாக அவர்கள் எண்ணுகிறார்களா? அதேபோல் ஒவ்வொரு ஸமூஹத்திலும் சுத்தம் அசுத்தம் என்பது ஜனங்களினால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டவைகள்தான். துர்நாற்றமுள்ள வஸ்துக்களை உணவாகக் கொள்பவர்களும் நமது ஸமூஹத்தில் இருக்கவில்லையா? பார்வைக்கு எவ்வளவு சுத்தமாக அவர்கள் காணப்படுகிறார்கள். இப்படி சரீரஸம்பந்தமான சுகாதாரவிதிகளை அவரவர்களுக்குத் தக்கபடி வர்ணாச்ரமதர்மங்

களாக வகுத்துள்ளார்கள் என்றுகூட நாம் கொள்ளலாம். ஆனால் நாமாக வகுத்ததாகக் கொள்ளாமல் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள் அவைகளை நாம் அப்படியே கௌரவிக்கிறோம், போற்றுகிறோம், அநுஷ்டித்துக் காண்பிக்கிறோம் என்று கொள்வதுதான் வர்ணாச்ரமதர்மம். இவைகளைப் புறக்கணிக்க நமக்கு அதிகாரம் கிடையாது. நமக்கு அதிகாரம் இருப்பதாக எண்ணிக்கொண்டு நாமாக ஸமூஹத்தைத் திருத்தியமைத்தால் நமது மதத்தைப் புறக்கணித்தவர்களாக ஆவோம். ஒரு புதுவித ஸமூஹத்தைத்தான் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறவர்களாவோம்.

மதத்தையே ஒழிக்க வந்தோம் என்று சொல்லுபவர்கள் எது செய்தாலும் அவர்கள் சொல்லுக்கும், செய்கைக்கும் பொருத்தமானதாகும், ஆனால் நாங்கள் மதத்தைப் புனிதமாக்கவே வந்தோம், எங்கள் கருத்துக்கள்தான் மதத்தின் உண்மையான கொள்கைகள் என்று கூறுகிற மந்தமதிகளிடம்தான் நாம் அநுதாபம் காண்பிக்க நேரிடுகிறது. ஆகவே ஜீவஸம்பந்தம்போன்ற ஸம்பந்தந்தான் வர்ணாச்ரம நித்ய நைமித்திக கர்மாநுஷ்டானங்களுக்கும் பக்தி, ப்ரபத்யாதி மார்க்கங்களுக்கும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். இவைகளைப் பிரிப்பதால் இரண்டும் அழிந்துவிடுவதற்கு முயற்சிப்பதாக ஆகும் என்பதால் புராதன நல்வழிகளைச் சிதறவடிக்காமல் இருக்கப் பாடுபடுவோமாக.

—:0:—

ஸ்ரீ:

கடன்

புதிது புதிதான அரசாங்கசட்டங்களினால் நமது வருவாய் மிகவும் குறைந்துகொண்டே வருகின்றன. பண்டங்களின் விலை ஏற்றத்தால் செலவு அதிகரித்துவிட்டது. சென்ற பத்து வருஷங்களில் நாம் நாகரிகத்தின் உச்சநிலையை எட்டி தொட்டுக் கொண்டிருக்கின்றோம். பலவித ஸௌகர்யங்களையே எதிர்ப்பார்க்கின்றோம். இதற்கு வேண்டிய பொருளாதார நிலை நமக்கு ஸௌகர்யமாக இருக்கின்றதா என்று கணக்கிட்டுப் பார்த்தால், இல்லை என்றுதான் முடிவுக்கு வரவேண்டியிருக்கும். ஆகிலும் அதிக தனமுடையவர்களைப் பார்த்து அவர்களைப் போல் நாமும் வாழ நினைக்கின்றோம், அதன் பயனாக கடன் வாங்கும்படி நேரிடுகிறது. கடன் வாங்கும்போது திருப்பிக்கொடுத்துவிட வேண்டும் என்றே வாங்குகிறோம். ஆனால் ஒவ்வொரு மாதம் அல்லது ஒவ்வொருவருஷமும் வருவாய்க்குமேல் செலவு உண்டாகிறது. அதைக் கொடுப்பதற்கு முடிகின்றதில்லை. உலகத்தில் இருபத்து நான்கு மணிகளும் வேலை செய்கின்றவை இரண்டு. ஒன்று கடியாரம். இருபத்திநான்கு மணிகளும் கடியாரம் சென்றால்தான் ஒரு தினமாகும். மற்றொன்று கடன். இருபத்திநான்கு மணியாயிற்றேயாகில் ஒருநாள் வட்டி அஸலுடன் சேர்ந்துவிடுகிறது. ஆகையால் இப்படி வ்ருத்தியடையும் கடனைக் கொடுப்பதற்கு வழியின்றி அரசாங்கத்தின் தயவை எதிர்ப்பார்க்கின்றோம். அவர்களும் கடன் நிவாரணச் சட்டம் முதலியன கொண்டுவந்து இவர்களை கைதூக்கிவிடுகின்றார்கள். இதனால் ஸந்தோஷப்படுகின்றோம். இது ந்யாய்யமாகுமா? முதலிலேயே வருவாய்க்குத்தக்கபடி வீண் கௌரவத்தை அபேக்ஷிக்காமல் 'शाखाहारं परं पथ्यं पञ्चमेऽहनि भोजनं' என்கிறபடி காய் கிழங்குகளை சாப்பிட்டோ, ஐந்து தினங்களுக்குமேல் புஜிப்பதோ நல்லது. 'ऋणादाने सुखं पूर्वं प्रदाने प्राणसंकटम्' என்கிறபடி கடனை வாங்கும்பொழுது ஸந்தோஷம்; திருப்பிக்

கொடுக்கும்பொழுது ப்ராணன் போவதாக எண்ணுகிறோம். 'चचाल चापं च मुमोच वीरः' என்று ராமபாணத்தினால் அடிபட்டு அஸ்த்ரமும் கையிலிருந்து நழுவி விழ, மிகவும் துக்கமுடையவனாகக் காண்கிறான் ராவணன். அவனைக் கம்பன் வர்ணிக்கும்போது 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்றான். அதற்கு த்ருஷ்டாந்தமாக கடன் வாங்கியவனைச்சொன்னான். அது அந்தக்காலம். இக்காலத்தில் கடன் கொடுத்தவன் கலங்கிநிற்கவேண்டியிருக்கின்றது. வாங்கிய கடனைக் கொடுக்காவிட்டால் மஹாபாபம் என்று ஶாஸ்த்ரம் கூறுகின்றது. எவனிடம் கடன் வாங்குகின்றானோ அவனிடம் அதைக் கொடுத்தால்தான் அப்பாபத்திலிருந்து விடுபட்டவனாகின்றான். இதுவிஷயமாக புராணக் கதை ஒன்று பின்வருமாறு.—

க்ருதயுகத்தில் கௌசிகன் என்றொரு ப்ராஹ்மணன் இருந்தான். பந்துப்ரியன். அவனுடைய வர்ணாச்ரமோசிதமான கார்யங்களைச் செவ்வனே செய்துவந்தான். ஸந்தானம், ஸம்பத் எல்லாம் நிறைந்திருந்தது. பணியாட்களுக்கும் யாசகர்களுக்கும் வாரி வழங்கினான். க்ருஷி (பயிர்) செய்தான். அதிலிருந்து பணத்தை ஸம்பாதித்தான். அதிலிருந்து லக்ஷாதிபதியாகி கோடீச்வரனாகவுமானான்.

கௌசிகனுக்கு ஸத்யசீலன் என்று ஒரு ஸ்நேகிதன் இருந்தான். அவன் மிக தரித்ரன். அவனுக்கு அனேக குழந்தைகளுமுண்டு. மெலிந்த சரீரமுடையவன். இவனை வ்யாதியும் பீடித்துவந்தது. வருவாயும் கிடையாது. ஸத்யசீலன் இவ்விதம் கஷ்டப்படுவதை கண்ணுற்ற கௌசிகன் தன்னுடைய தனத்திலிருந்து ஸத்யசீலனுக்கு வேண்டிய தநத்தை கொடுத்து உதவி புரிந்து வந்தான்.

சிலகாலம் கழிந்தவாறே இருவர்களும் இறந்துபோனார்கள். இவர்களை யமபடர்கள் அழைத்து தர்மராஜனிடம் சேர்ப்பித்தார்கள். அவனைக்கண்டதும் கடன் கொடுத்துவந்த கௌசிகன் நமஸ்கரித்து பரபரப்புடன் சில வார்த்தைகள் சொன்னான். 'தர்மராஜ! நான் சொல்வதைக் கேட்கவேணும். இச்சத்யசீலன் தத்தாபஹாரி; செய்நன்றி கொன்றவன்; நான் கொடுத்த பணத்தைத் திரும்பித்தராமல் யமலோகத்தை யடைந்திருக்கிறான். பொய்ப் பேசுமிவனுக்கு ஸத்யசீலன் என்று பெயர்! நான் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து ஸம்பாதித்து வைத்திருந்த பணத்தை அரசாங்கத்தாரும், திருடர்களும் அபஹரிக்கலானார்கள். அதனால் என்னுடைய தநம் கொஞ்சம் கொஞ்சமாக குறையலாயிற்று. என் பெண்ஜாதி, பிள்ளை முதலியவர்கள் வருமையால் வருந்துகின்றார்கள். இவனோ கடனைக் கொடுக்காமல் இங்கு வந்துவிட்டான். என்ன செய்வது? இவனுடைய வேஷ பாஷணாதிகளில் மயங்கக் கூடாது. பசுந்தோல் போர்த்த புலி; மஹாபாபி; குடும்பத்தை நாசஞ்செய்தவன். எப்பொழுது பணம் கேட்டாலும் அழுகைதான். இவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைக்க வேண்டாம்' என்றான்.

இவைகளைக் கேட்டுநின்ற ஸத்யசீலன் மிகவும் பயங்கரனாய்நிற்கின்ற தர்மராஜனைப்பார்த்துச் சில வார்த்தைகள் சொல்லுகின்றான். 'போ ஸ்வாமின்! நான் மஹாபாபி, பாபகர்மாக்களையே செய்தவன்; பாபாத்மா; பாபத்திலிருந்தே பிறந்தவன். என்னை ரக்ஷிக்கவேண்டும். நும் எதிரில் பேச சக்தியற்றவன். என்னைப் போன்ற பாபிகளின் வார்த்தை எங்கும் ஏற்கத்தக்கினதாக இல்லை. எங்கும் நிந்தித்தே வருகின்றார்கள். ஆகிலும் என் ஏழ்மையை உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாபியான யான் அனேக பிள்ளைகுட்டியுடையவன். கௌசிகனிடத்தில் பணத்தை வாங்கி குடும்பத்தைக் காப்பாற்றிவந்தேன். பயிரிட்டு அதில் விளையும் நெல்லைப்போட்டு கடனையடைத்துவிடலாம் என்றெண்ணி கடன் வாங்கினேன். ஆனால் அக்காலத்தில் பெரிய துர்பிக்ஷம் உண்டாகிவிட்டது. ஜனங்கள் வ்யாதியினால் பீடிக்கப்பட்டார்கள். மழையில்லாத

தால் பயிரிட முடியவில்லை. ஆதலால் அன்ன ஆஹாரமின்றி தவிக்கலானேன். என் பிள்ளைகளில் சில தேசாந்தரம் ஓடிவிட்டன. சில லோகாந்தரம் (மறித்து) சென்றுவிட்டன. இப்பொழுது கிராமத்தில் கடன் கொடுத்தவர்கள் ஹிம்ஸிக்கலானார்கள். வாய்தாமுதலிய வரிகள் அரசாங்கத்திற்குக்கட்டாததினால் அரசாங்கத்தைச் சேர்ந்த கிராமாதிகாரிகள் என்னுடைய மாடு, வண்டி முதலியவைகளை எடுத்துச் சென்றார்கள். என்னுடைய பெரிய வீடும் பற்றி எரிந்து சாம்பலாயிற்று. ஆகையால் எதையும் விற்றுக்கொடுப்பதற்கில்லாமல் போய்விட்டது. பிச்சையெடுத்துப் பிழைப்போமென்றால் வ்யாதியோ கடுமையாக பீடிக்கிறது என்னை. இப்படியாக பசியொருபக்கம் பிணி ஒருபக்கம் மிகுந்த பிராஜைகள் ஒரு பக்கம் பலமாக தன் பலங்களைப் பயன்படுத்திக்கொள்ளும்பொழுது, மிக க்ரூரர்களான உன் படர்கள் காலபாசத்தால் வன்மையாகக் கட்டி என்னை உம்மிடம் சேர்ப்பித்திருக்கின்றார்கள். நான் என்ன செய்வேன். என்னை இவர்கள் துன்புறுத்துகின்றார்களே. நான் ஒன்று நினைக்க தைவம் ஒன்று எண்ணிற்று. உடுக்க உடையுமின்றி பல் விழுந்து தாடை யொட்டி கிடக்கின்றேன், என்செய்வேன். நான் இப்படியிருக்க, எனக்குக் கடன் கொடுத்த கௌசிகனை தேவகணங்கள் சூழ்ந்திருக்கின்றார்கள். அப்ஸரஸ்த்ரீகள் உபசரிக்கின்றார்கள். உன் எதிரில் மிக தேஜஸ்வியாக விளங்குகின்றான். முன்பு என்னிடத்தில் அதிகப்ரீதியுடனிருந்தவன் இப்பொழுது அப்ரீதியுடன் இருக்கின்றான். நான் இளைத்துவிட்டதே (தரித்ரனாகியதே) இதற்குக் காரணம். காட்டுத்தீக்கு ஸகாவாயிருந்து அத்தீயை வ்ருத்திசெய்யும் காற்றே, அல்பமான தீபத்தை அணைத்துவிடுகிறதை நாம் பார்த்துவருகிறோம். 'कृशे कस्यास्ति सौहृदम्.' ஆகையால் இக்கடனைத் தீர்க்கும் வழி யாது?

இவ்விருவர்களுடைய வார்த்தைகளையும் கேட்ட தர்மராஜன் சொல்லுகிறான்:—

ஸத்பாத்ரத்தில் தானம் பண்ணுபவனையும், ஏழைகளுக்கு கடன் கொடுத்து உதவுபவனையும், நல்ல நடத்தையுடன் கூடினவனையும், ம்ருதுபாஷியாயும், பந்துப்ரியனையும், வரும் அதிதிகளுக்கு அன்னமிடுகிறவனையுமுள்ள தகவான் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் பூஜிக்கப்படுவான். செய்நன்றி மறந்த வேலைக்காரன், கடன்காரன், நன்னெறி தவறியவன், துராசாரன், காமுகன் இவர்கள் எல்லா இடங்களிலும் கஷ்டப்படுகிறார்கள். 'अदत्तदोषेण भवेद्दरिद्रः दारिद्र्यदोषेण करोति पापं । पापादवश्यं नरकं प्रयाति पुनर्दरिद्रः पुनरेव पापी' என்கிறபடி வாங்கிய கடனைக் கொடுக்காததால் தரித்ரனாகப் பிறக்கிறான். அதனால் பாபத்தைச் செய்கிறான். பாபம் செய்வதால் நரகத்தை அடைகிறான். மறுபடியும் தரித்ரனாகப் பிறந்து பாபத்தைப் பண்ணுகிறான். மேலும் கடன்காரன் கடன் கொடுத்தவனுக்கு வேலைக்காரனாகவும் மாடாகவும் இருந்து மறுஜன்மத்தில் உழைக்கின்றான். வாங்கிய கடனைத் திருப்பி கொடுத்தாயாகில் இவ்விதமான கஷ்டங்களிலிருந்து விடுபடுவாய் என்று.

ஆகையால் முன் பின் யோசியாமல் கடனை வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்காமல் இங்கிருந்துவிட்டால் பிறகு பல ஜன்மங்கள் பாபம் நம்மை அநுவர்த்திக்கின்றது. கடன் கொடுத்தவர்கள் இங்கு கொஞ்சம் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அடைந்தாலும் எங்கும்நிரந்தரமான கஷ்டம் கடன்காரர்களுக்கே என்பது நிச்சயம். இதற்காக அரசாங்க சட்டத்தை எதிர்ப்பார்த்து அதன்படி செய்வது கடன் கொடுத்துதவியவர்களை த்ரோஹம் செய்ததாகாது. நன்கு பராமர்சித்துப் பார்த்தால் நமக்கேநாம் த்ரோஹம்பண்ணிக்கொள்கிறோம் என்பது புலனாகும்.

ஸ்ரீ:

காஞ்சீபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சீபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு

காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி,

பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த

நாகரீகமான பார்டர்கள் 6 கெ, 8 கெ, 9 கெ, 9½ கெஜம்

சேலைகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல்கோர்வை, சரிகைபேட் 10X6, 8X8,
9X9, ஜோடிகளும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில் விஜயம் செய்து ஜவுளிகள் வாங்கி
திருப்தி அடையக் கோருகிறோம்.

கந்த விலாஸ்

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை

அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்

போன் நெ. 123: கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:- அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
213, தங்கசாலை தெரு	மைலாப்பூர்	கீழ ரதவீதி	கடை வீதி
மதராஸ்—1.	மதராஸ்—4.	திருநெல்வேலி	சேலம்—1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

மஹாவீரவைபவம்

(15-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகை 332-வது பக்கத்தின் தொடர்ச்சி)

ராம! வீர்யகர்வத்தினால் வாலி தூக்கி எறிந்த துந்துபியின் எலும்புக் குவியல் இதோ மலை போலக் காண்கிறது. பெருங்கிளை தாங்கிப் பெருத்த ஏழு ஸாலமரங்கள் இதோ நிற்கின்றன. இம்மரங்களைத் தன் பலத்தினால் ஒரே காலத்தில் உலுக்கி இலைகளை எல்லாம் உதிரச் செய்யும் வல்லமையுள்ளவன் வாலி. ராம! வாலியின் இணையற்ற வீர்யத்தை நான் விண்ணப்பித்து விட்டேன். அப்படிப்பட்ட வாலியை நீர் எவ்வாறு கொல்ல முடியுமென்று ஸுக்ரீவன் ராமபத்ரவீர்யப்ரபாவத்தை அறியாமல் சொல்வதைக் கேட்ட லக்ஷ்மணன் ,எந்தக் காரியம் செய்தால் வாலிவதத்தில் உமக்கு நம்பிக்கை உண்டாகும்'என்று மந்தஹாஸத்துடன் வினவினான். முன் காலத்தில் ஒவ்வொன்றாகப் பல தடவை வாலியினால் அடிக்கப்பட்ட இந்த ஏழு ஸாலமரங்களில் ஏதாவதொன்றை ஒரே பாணத்தினால் ராமன் பிளப்பாராகில் ராமபராக்ரமம் வாலியைக் கொல்லுமென நம்புவேன். இந்த துந்துபியின் எலும்புக் குவியலை ஒரே காலினால் உதைத்து இருநூறு வில் ப்ரமாணங்கொண்ட தூரம்செல்லும்படி ஸ்ரீராமன்வேகமாக எறிவாராகில் லக்ஷ்மணா! ராமபராக்ரமம்வாலியைக்கொல்லுமென நம்புவேன். (நான்கு கை நீளத்தளவு வில்லெனப்படும். இங்கு ஸுக்ரீவன் கூறியது எண்ணூறுகைநீளதூரமாகும்) மஹாபலசாலியான ஸ்ரீ ராமனை மித்ரனாகப் பெற்றிருந்தும் யான் வாலிபலப்ரபாவத்தை நேரில் அனுபவித்தவனாகையால் வாலியின்பீமபராக்ரமம்திற்கஞ்சியே இவ்வாறு பேசுகின்றேன். இதனால்ராமனைபயமுறுத்துவதாகவோ அவமதிப்பதாகவோ எண்ண வேண்டாம். ஸ்ரீ ராமபத்ரனுடைய ஒரே விதமான வாக்கும் புத்தியும் தைரியமும் தோற்றமுமே அவன் பராக்ரமசாலி என்பதை வெளியிடுகின்றன. ஸ்ரீராமபத்ரனின் வீர்யத்தை நான் கண்டதில்லையாகையால் ஸ்ரீ ராமபத்ரன் எனக்கு நம்பிக்கையூட்டவேண்டுமெனக் கூறி முடித்தான். இதைக் கேட்டதும் ஸ்ரீ ராமபத்ரன் 'யுத்தகாலத்தில் என் பராக்ரமமே வெற்றி கொள்ளுமென்பதில் உனக்கு நான் நம்பிக்கையூட்டுகின்றேன்' என மந்தஹாஸத்துடன் மொழிந்து விளையாட்டாகவே துந்துபி சரீரத்தை இடது கால் கட்டைவிரலினால் அசைத்தெறிந்து பத்து யோஜனை தூரம் போகச் செய்தார் என்று.

(கரு) வெண்மை நிறத்தினால் கைலாஸமலைச் சிகரம் போலிருந்த துந்துபி எலும்புக் குவியலை ஸ்ரீ ராமபத்ரன் தன் இடது கால் கட்டைவிரலின் சிறு அசைப்பினாலேயே வெகு தூரத்தில் எறிந்து தன் தேஹவீர்யத்தில் ஸுக்ரீவனுக்கு விச்வாஸமுண்டாகச் செய்தார் என்று. துந்துபி எலும்புக் குவியலை வெகு தூரம் எறிவது தன் பராக்ரமத்திற்கு எம்மாத்திரமென எண்ணிய ஸ்ரீ ராமபத்ரன் இடது கால் கட்டைவிரலையுபயோகித்தார் என்பதை வெளியிடக் கருதியே நம் ஸ்வாமி ஸ்ரீராமாயணத்தில் ('கட்டைவிரலினால்') பாதாங்குஷ்டேந- என்றிருக்கச் செய்தேயும் இங்கு 'தக்ஷிணேதரபாதாங்குஷ்ட' என்று இடதுகாலைக் கூறுகிறார். இவ்வர்த்தத்திற்கு இங்கு ஸ்ரீராமாயணத்திலுள்ள 'லீலயா' என்ற பதம் துணை செய்யும். அரக்கனின் உடலுக்கு வலது கால் கட்டைவிரலால் மரியாதை காட்டுவது உசிதமில்லையல்லவா? பிற மதத்தினரின் செருக்கையடக்க அவர்கள் தலை மேல் என் இடது காலை வைக்கிறேன் (பதமதக்ஷிணம் லக்ஷ்யதாம்) என்று நம் ஸ்வாமி ஸாதித்திருக்கும் அழகைக்

காண்க. ஸுக்ரீவன் வேண்டிய அளவுக்கு மேலும் வெகு தூரத்தில் துந்துபி உடலை ஸ்ரீராமபத்ரன் எறிந்திருந்தும் ஏழு ஸாலமரங்களிலொன்றை பாணத்தினால் பிளந்தால்தான் ஸ்ரீராமபத்ரன் பலத்தில் தன் ஸந்தேஹம் நீங்குமென ஸுக்ரீவன் கூறியதாக ஸ்ரீராமாயணத்திலிருக்க, துந்துபி உடலை வெகு தூரமெறிந்ததாலேயே ஸுக்ரீவனுக்கு ஸ்ரீராமபத்ரனிடம் வீர்யவிச்வாஸமுண்டாயிற்று என்று நம் ஸ்வாமி ஸாதித்திருப்பது எங்ஙனம் பொருந்துமெனில், ஸ்ரீராமபத்ரனின் தேஹபலத்தையும் அஸ்த்ரபலத்தையுமறிய விரும்பியே ஸுக்ரீவன், துந்துபிசரீரத்தை தூரத்திலெறிவதையும் ஸாலவ்ருக்ஷத்தைப் பிளப்பதையும் ஸ்ரீராமபத்ரன் செய்யவேண்டுமென ப்ரார்த்தித்தான். வாலி தன் இரு கைகளின் முழு பலத்தாலும் ஒரு யோஜனதூரமெறிந்த துந்துபிசரீரத்தை அநாயாஸமாக இடது கால் கட்டைவிரலசைப்பினால் பத்து யோஜனதூரத்தில் ஸ்ரீராமபத்ரன் எறிந்ததைக் கண்டதும் ஸுக்ரீவன் தன் நண்பனின் தேஹபலத்தில் பூர்ண விச்வாஸம் கொண்டுவிட்டான். தன் ஸந்தேஹம் நீங்கவில்லையென ஸுக்ரீவன் குறிப்பிட்டது அஸ்த்ரபலத்தைக் கருதியே என பெரியோர் இங்கு ஸமாதானம் கூறுகின்றனர்.

ஸ்ரீ:

ஸ்ரீ மாலோலமுத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹெட்டுகள், ரசீது புத்தகங்கள்
மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில்
தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில்
குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன்
கவனித்து செய்து கொடுக்கப்படும்.

மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை
வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல முத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

உடனே வாலி கீழே விழுகின்றான். வெட்டுண்ட மரம் பூமியில் சாய்வதுபோல் வாலி, பாணம் பட்டவுடன் பூமியில் விழுந்து விட்டான் என்று.

(கரு) ஸ்ரீராமபத்ரன் பயங்கரமான பாணத்தை எறிந்துசற்பாறைபோல் அகன்றும் உறுதி பூண்டதுமான வாலியின் மார்பைப் பிளந்து வாலியைக் கொன்றான். இந்த சூர்ணிகையில் லங்கேச்வரனான ராவணனுக்கும் பரம வேதனையை அளித்தவன் வாலி என்று வாலியின் மஹிமையைக் கூறப்பட்டிருப்பதால் வாலியைக் கொன்ற ஸ்ரீராமபத்ரனுக்கு லங்கேச்வரனான ராவணனைக் கொல்வது எம்மாத்திரமென்பது ஸூசிக்கப்பட்டது. இங்கு ராக்ஷஸ ராஜனை 'ராவண' என்று நிர்தேசம் செய்ததால் வரபலத்தாலும் தேஹபலத்தாலும் யாவரையும் அலறச் செய்த ராக்ஷஸ ராஜன் வாலியிடமகப்பட்டுப் பெரும் வேதனை பட்டான் என்பது ஸூசிக்கப்படுகிறது. ராவயதி (பிறரை அலறச் செய்பவன்) என்ற காரணம் கொண்டல்லவா ராவணன் என்ற பெயர் அவனுக்கேற்பட்டது. வாலியிடம் ராவணன் வேதனையடைந்த வரலாறு வருமாறு:— நான்முகனளித்த வரங்களால் செருக்கு கொண்ட ராவணன் ஒரு ஸமயம் அர்க்யப்ரதானம் செய்துகொண்டிருந்த வாலியைப் பின்புரத்தில் கட்டிக் கொண்டான். இவன் கர்வத்தை யடக்குவதற்காக வாலி இவனைக் கக்ஷத்துள்ளிருக்கி யிழுத்துக்கொண்டே வேகமாகப் புறப்பட்டு நான்கு திசைக் கடல்களிலும் நீராடி ஸந்த்யாவந்தனம் செய்துவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பி உயிருள்ள பிணமே போலவிருக்கும் ராவணனைக் கீழே உதறித்தள்ளி இதுகாறும் அவனிருந்ததை அறியாதவன் போலிருந்து 'லங்கேச்வரரே எங்கிருந்து எப்போது வந்தீர்' என வினவி ராவணனின் கொழுப்பையடக்கினான் என்று வாலி ஸ்ரீராமபத்ரனிடம் ஒரு குற்றமும் புரியாதபடியாலும் வாலியின் பின்புரத்திலிருந்து அவனைக் கொன்றதாலும் ஸ்ரீராமபத்ரன் செய்த வாலிவதம் நீதிக்கும் பொருந்தாது எனச் சிலர் வாதிப்பர்.

சில நியமங்களுடன் ஸந்த்யாவந்தனாதிகள் செய்து ராஜ்யபாலனம் செய்துவந்த வாலி சாஸ்த்ரவிதிகளுக்குக் கட்டுப்பட்டவன் என்று கொண்டு அவனை வதம் செய்தது சரியல்ல என்று ஆக்ஷேபிக்கிறார்களா? அல்லது வாலி குரங்கினத்தைச் சேர்ந்தவன் ஆகையால் சாஸ்த்ரவிதிகளுக்குக் கட்டுப்படாதவன் என்று கொண்டு அவனைக் கொன்றது நீதியாகாது என ஆக்ஷேபிக்கிறார்களா? என்று நாம் அவ்வாதத்தின் கருத்தை யாராய்வோம். வாலி சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டவன் எனில் ஸுக்ரீவன் மனைவியையபஹரித்தான் வாலி என்ற காரணத்தினால் அவனை வதம் செய்வது நீதியேயாகும். தம்பியின் மனைவியைப் புணர்பவனுக்கு வதத்தை சாஸ்த்ரம் விதிக்கிறதல்லவா. யுத்தகளத்தில் தான் எதிர்நின்று கொல்லவேண்டும் பின்புறத்திலிருந்து கொல்லக் கூடாது என்று நியமமிருக்கிறதே தவிர சாஸ்த்ரவிரோதமாக நடந்துகொள்பவனைத் தண்டிக்கும்போது எதிர்நின்றுதான் தண்டனை விதிக்கவேண்டுமென்ற நியமம் கிடையாதாகையால் சாஸ்த்ரவச்யனான வாலியைப் பின்புறம் நின்று கொன்றது உசிதமேயாகும். வாலி குரங்கினத்தைச் சேர்ந்தவன் சாஸ்த்ரவச்யனல்ல என்று கொண்டு ஆக்ஷேபித்தால் க்ஷத்ரியர்கள் மிருகங்களை வேட்டையாடிக் கொல்வது உசிதமேயாகையால் பின் நின்று கொல்வதில் எந்த அநீதியுமில்லை. இனி ஸ்ரீராமபத்ரனிடம் ஒரு குற்றமும் செய்யாத வாலியைக் கொல்வது உசிதமா என்பதைப் பராமர்சிப்போம்.

பகவான் தன்னைச் சரணடைந்தவர்களின் விரோதியே தனக்கும் விரோதியென்பதை 'பாண்டவான் த்விஷஸே ராஜன்! மம ப்ராணாஹி பாண்டவா,' என்று கூறுமுகத்தால் விளக்கியிருப்பதாலும், 'வைரிணம் ப்ராத்ருரூபிணம் | வாலிநம் ஜஹி காகுத்ஸ்த மயா பத்தோயமஞ்ஜலி: ||' என்று கூறித் தன் விரோதியான வாலியைக் கொல்லும்படி ஸுக்ரீவன் சரணமடைந்திருப்பதாலும் ஸுக்ரீவவிரோதியான வாலி ஸ்ரீராமபத்ரனுக்கும் விரோதியாகையால் குற்றமுள்ள அவனைக் கொல்வது மிகவுமுசிதமே. வாலியின் எதிரில் போர் செய்பவனின் பாதி பலம் வாலியைச் சேரவேண்டுமென வாலிக்கு நான்முகன் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகவும் வாலியை நான் கொல்லுவேன் என்று ஸுக்ரீவனுக்குக் கொடுத்த தம் ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுவதற்காகவும் ஸ்ரீராமபத்ரன் வாலியைப் பின்புறமிருந்து கொன்றான் என்பதே தத்துவம். வாலியின் எதிரே சண்டையிட ஸ்ரீராமபத்ரன் சென்றால் ஸ்ரீராமபத்ரனின் குணங்களால் இழுக்கப்பட்டு வாலி ஸ்ரீராமபத்ரனைச் சரணமடைய நேரிடும். அப்போது எதிரிகளிடமும் அன்பு செலுத்தும் ஸ்ரீராமபத்ரன் அவனை ஏற்றுக் கொள்ள நேரிடும். ஸுக்ரீவனிடம் செய்த வாலிவத ப்ரதிஜ்ஞை வீணாக நேரிடுமென்பதைக் கருதியே பின்புறமிருந்து கொன்றதாகக் கொள்ளவேண்டும். சரணாகதர்களின் விரோதியையழிப்பது பகவானின் வ்ரதமென்பது இச்சூர்ணிகையினால் உணர்த்தப்படுகிறது. வாலி சாஸ்த்ரவிதிக்குட்பட்டவனாயினும் உட்படாதவனாயினும் ஸ்ரீராமபத்ரன் வதம் செய்வதற்குரியவனே என்பதை ஸூசிக்கவே நம் ஸ்வாமி 'சதுருததிவிஹாரணசதுர' என்றும் 'கபிகுலபதி' என்றும் வாலியைக் குறிப்பிடுகிறார்.

மஹாவீரவைபவத்தில் கிஷ்கிந்தாகாண்டம் முற்றும்.

अपारपारावारपरिखापरिवृतपरपुरदवदहनजवनपवनभवकपिवरपरिष्वङ्गभावित सर्वस्वदान!

அபாரபாராவாரபரிகாபரிவ்ருத பரபுரதவதஹநஜவந பவநபவ கபிவரபரிஷ்வங்கபாவிதஸர்வஸ்வதாந!

(ப-ரை) அபார - மறுகரையில்லாத, அன்றிக்கே கடக்கவொண்ணாத, பாராவார - ஸமுத்ரமாகிற, பரிகா - அகழியினால், பரிவ்ருத - சூழப்பட்ட, பரபுர - சத்ருவான ராவணனுடைய லங்காபுரத்திற்கு, தவதஹந - காட்டுத்தீ போன்றவரும், ஜவந - வேகமாகச் செல்பவரும், பவநபவ - வாயுபுத்ரருமான, கபிவர - கபிச்ரேஷ்டரான ஹநுமானை பரிஷ்வங்க - ஆலிங்கனம் செய்துகொண்டதால், பாவித - உண்டுபண்ணப்பட்ட, ஸர்வஸ்வதாந - ஸர்வஸ்வதானத்தை உடைய ஸ்ரீராமபத்ர!

இங்கு அறியவேண்டிய ஸ்ரீ ராமாயணகதை வருமாறு:- வாலிஸம்ஹாரம் செய்தருளிய ராமபத்ரன் லக்ஷ்மணனைக்கொண்டு ஸுக்ரீவனுக்கு வாநரராஜ்யபட்டாபிஷேகம் செய்து வைத்தார். சரத்காலம் வந்தவாறே ஸுக்ரீவன் ஸீதையைத் தேடிவரும்படி நாலு திசைகளிலும் ஏராளமான வாநரவீரர்களை அனுப்பினான். அவ்வீரர்களுள் அங்கதன் ஹநுமான் ஜாம்பவான் நீலன் முதலியவர்கள் தென் திசையில் ஸீதையைத் தேடச் சென்றனர். அவர்கள் விந்தியமலையருகில் ஸம்பாதி என்ற கழுகரசனைச் சந்தித்து அவன் மூலமாக லங்காநகரத்தில் ஸீதைப் பிராட்டி யிருப்பதையறிந்துகொண்டனர். உடனே கடற்கரை சென்று நூறு யோசனை விஸ்தாரமுள்ள கடலைக் கடந்து லங்கை செல்வதற்கு வேண்டிய சக்தி பெற்

றவன் ஹநுமானே என நிச்சயம் செய்தனர். ஜாம்பவான் முதலியவர்கள் மூலமாக ஹனுமானைத் துதி செய்து லங்கை சென்றுவரும்படி வேண்டினர். அவரும் மஹேந்த்ரமலையின் கொடுமுடி ஏறி மஹோத்ஸாஹத்துடன் வேகமாக வானத்தில் பறந்து ஸமுத்ரத்தைக்கடந்து ராவணராஜதானியான லங்காபுரம் சென்றார். அங்கு அசோகவநத்தின் நடுவே சிம்சுபா மரத்தின் அடியில் ஸ்ரீ ராமபத்ரனே ஸர்வதா த்யானம் செய்தே உயிர் வாழ்ந்துவரும் ஜநக குமாரியான ஸீதைப் பிராட்டியைக் கண்டார். கண்டதும் பரமாநந்தம் கொண்டு கோஸலாதிப்தியான ஸ்ரீ ராமபத்ரனின் தாஸன் எனத் தன்னைக் கூறிக்கொண்டு ஸீதையின் அருகில் சென்றார். ஹநுமான் நெருங்க நெருங்க ஸீதைப் பிராட்டியும் முன்பு ஸந்யாஸி வேஷத்துடன் வந்த ராவணனே இப்போது வாநரரூபத்துடன் வருகிறானே என்று ஸந்தேஹித்து ஹநுமானை நோக்கி ஸ்ரீ ராமபத்ரனின் அழகு, தோற்றம் முதலியவைகளைச் சொல்லுமாறு கேட்டாள். தாமரையிதழ் போன்ற திருக்கண்களும், எல்லாப் பிராணிகளின் மனத்தையும் கவரும் ஸௌந்தர்யம் முதலிய குணங்களும் பொருந்தியவன் ஸ்ரீ ராமபத்ரன் என்று வர்ணித்து ஹநுமான் ஸ்ரீ ராமபத்ரனின் நாமாக்ஷரங்கள் கொண்ட மோதிரத்தை ஸீதைப் பிராட்டியிடம் ஸமர்ப்பித்தார். மேலும் தேவி! புருஷோத்தமனான ஸ்ரீராமபத்ரன் தங்களை விட்டுப் பிரிந்ததால் எப்போதும் தூக்கமே இல்லாதிருக்கிறார். சிறிது தூக்க நேரத்திலும் தங்கள் பெயரை யுச்சரித்துக்கொண்டே விழித்துக் கொள்கின்றார்' என்பன போன்ற அக்காலத்திலுள்ள ஸ்ரீ ராமபத்ரனின் அவஸ்தைகளைக் கூறித் தான் ஸ்ரீ ராமபத்ரனின் தூதனே என்பதில் விசேஷ நம்பிக்கையை ஸீதாதேவிக்கு உண்டுபண்ணினார். பிறகு ராவணனுடைய பலத்தையும் மனோநிலையையும் அறிந்து செல்வது ஸ்ரீ ராமபத்ரனுக்கு உகப்பைத் தருமெனக் கருதி ராவணனுக்கு ப்ரியமான அசோகவநத்தை அழிக்க ஆரம்பித்தார். இதையறிந்து கோபங்கொண்ட ராவணன் ஜம்புமாலி முதலிய ராக்ஷஸவீரர்களுக்கு ஹநுமானைக் கொண்டுவரும்படி உத்திரவிட்டான். அவர்கள் யாவரையும் போரில் கொன்றுவிட்டு தான் செய்த வீரச் செயல் யாவும் ஸ்ரீ ராமபத்ர பராக்ரமப்ரபாவத்தால் ஏற்பட்டவையே என்று தோற்றும்படி ஸ்ரீ ராமபத்ரப்ரபாவத்தை விசேஷமாக ஹநுமான் வர்ணித்து வந்தார். ராவணனால் அனுப்பப்பட்ட இந்த்ரஜித் என்பவன் போர்க்களத்தில் ப்ரம்மாஸ்த்ரத்தை ப்ரயோகம் செய்து ஹநுமானைக் கட்டிவிட்டான். ப்ரம்மாஸ்த்ரமஹிமையையறியாத ராக்ஷஸர்கள் வேறு பல சணற் கயிறுகளாலும் ஹநுமானைக் கட்டிவிட்டனர். தன் கட்டுள்ள விடத்தில் மற்றொன்றின் கட்டுதலை ஸஹிக்காத ப்ரம்மாஸ்திரம் தன்னை விட்டு நீங்கியதை ஹநுமான் உணர்ந்தாராயினும் ராவணனைக் காண விருப்பம் கொண்டு ராக்ஷஸர்கள் செய்த உபத்ரவங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டார். ராவணஸமீபமும் சென்றார். பித்ரு வாக்யபரிபாலனத்திற்காக ஆரண்யவாஸம் செய்யும் ஸ்ரீராமபத்ரனுக்கும் ஸுக்ரீவனுக்கும் ஏற்பட்ட தோழமையையும் ஸுக்ரீவன் ஆணையால் ஸீதையைத் தேட வாநரர்கள் திசைகள் எல்லாம் சென்றதையும் தென் திசை வந்தவர்களில், தான் கடலைக் கடந்து லங்கை சேர்ந்து அசோகவநத்தில் சிம்சுபா மரத்தினடியில் ஸீதையைக் கண்டதையும் கூறி வாலியைக் கொன்ற ராமனின் சினத்தைத் தணிப்பதற்காக ஸீதைப் பிராட்டியை அப்பெருமானிடம் கொண்டுசேர்ப்பதே தகுந்த கார்யமாகுமென்றும் இல்லாவிடில் ராக்ஷஸகுலம் அழிவது நிச்சய

மென்றும் தைரியமாக ராவணனிடம் எடுத்துக் கூறினர். இதைக் கேட்டதும் கோபமடைந்த ராவணன் ஹநுமானைக் கொல்லும்படி உத்திரவிட்டான். உடனே தர்மாத்மாவான விபீஷணன் தூதனைக் கொல்வது நீதியுமாகாது, தர்மமுமாகாது, பாபமேயாகுமென்று கூறி ஹநுமானைக் கொல்லவுத்தேசித்ததைத் தடுத்துவிட்டார். குரங்கினத்துக்கு வாலே முக்கியமான அவயவமாகையால் அதில் தீயிட்டு விகாரப்படுத்துங்கோள் என்று ராக்ஷஸர்களுக்கு ராவணன் உத்தரவு செய்தான். உடனே ராக்ஷஸர்கள் ஒருங்குகூடிப் பழைய வஸ்த்ரங்களை ஹநுமானின் வாலில் சுற்றித் தீயிட்டனர். இவ்விஷயத்தையறிந்த ஸீதைப்பிராட்டி அக்நிதேவனை ஹநுமானிடம் சீதகுணத்தைக் காண்பிக்கும்படி வேண்டினுள். இதனல் ஹநுமானின் வாலில் பிடித்த தீ ஹநுமானுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாதிருந்துவிட்டது. பிறகு ஹநுமான் வெகு வேகமாகக் குதித்தெழுந்து பாபிகளான ஒவ்வொரு ராக்ஷஸர்களின் வீட்டிலும் அத்தீயைப் பரவச் செய்து அசோகவநமும் விபீஷணக்ருஹமும் தவிர மற்றைய லங்காபுரமெல்லாம் தீயினல் பொசுங்கும்படி செய்துவிட்டார். ஸீதையிடம் மறுபடியும் சென்று வணங்கி ஸ்ரீ ராமபத்ரனிடம் அடையாளமாகக் காட்டும்படி ஸீதையளித்த சூடாமணியைப் பெற்றுக்கொண்டு லங்கையிலிருந்து கிளம்பிக் கடலின் வடகரையடைந்து மற்ற வாநரவீரர்களுடன் சேர்ந்துகொண்டார். தான் ஸீதையைக் கண்ட வாலாற்றைக் கூறி வாநரவீரர்களுக்கு மகிழ்ச்சியூட்டி அவர்களுடன் கிளம்பி கிஷ்கிந்தை சென்று ருச்யமூகமலையருகிலுள்ள ஸ்ரீ ராமபத்ரனை நெருங்க பக்தியுடன் வணங்கி லங்காநகரத்தில் ஸீதையைக் கண்டதையும் மற்றும் தான் செய்த காரியங்களையும் விஜ்ஞாபித்தார். மேலும் ராம! தேவரீருடைய பிரிவினல் இளைத்தும் வருந்தியும் ஓரே பின்னலையணிந்தும் எண்ணங்கள் யாவும் தேவரீரையே அடையும் நிலைமையடைந்துமுள்ள ஸீதாதேவியை லங்கையில் ராவணனுடைய அந்தப்புரத்திலுள்ள அசோகவநத்தில் நான் கண்டேன். அவள் ஒரு ஸமயம் தன் திலகம் அழிந்தபோது தாங்கள் காவிக் கல்லினல் தனக்குத் திலகமிட்டதை அடையாளமாகக் கூறும்படி அவள் சொன்னுள். இனி ஒரு மாஸகாலம்தான் தேவரீர் வருகைக்காகத் தான் ஜீவிக்க விரும்புவதாகவும் பிறகு வாழமாட்டேன் என்றும் அவள் கூறியுள்ளாள் என்றிவ்வாறு ஸீதை ஸம்பந்தப்பட்ட ஸகல வ்ருத்தாந்தங்களையும் விண்ணப்பித்தார். இதைக் கேட்டதும் ஸ்ரீ ராமபத்ரன் அடங்காப் பேரானந்தமடைந்து இப்படிப்பட்ட மஹோபகாரம் செய்த ஹநுமானுக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு யாதுண்டு? மஹாபாபி ராவணன் லங்கையில் சிறையிலிட்டதாலும் பத்து மாத காலமாக என் வலாறு ஒன்றும் கிடைக்காததாலும் ராவணன் முதலிய பல ராக்ஷஸ இனத்தாரின் கடுஞ்சொற்களாலும் மிக மிக மனவருத்தமடைந்து வேறு கதியில்லாது ப்ராணத்யாகம் செய்ய ஸீதை யத்தனித்த ஸமயத்தில் என் வரலாற்றை வர்ணித்தும், நான் அனுப்பிய மோதிரத்தை அர்ப்பணித்தும், 'தேவி! வருத்தமுருதே, கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீ ராமபத்ரன் உன்னையடைய வருவார்' என்பன போன்ற தேர்தல் வார்த்தைகள் பல மொழிந்தும் ஸீதையின் உயிரை ரக்ஷித்துப் பிறகு ஸீதையைக் காணகில்லேனகில் நான் உயிர் துறப்பது உறுதி என நிச்சயித்திருந்த என்னிடம் திரும்பி வந்து ஸீதையைக்கண்ட விருத்தாந்ததைக் கூறுமுகத்தால் எனக்கும் ப்ராணப்ரதானம் செய்த இம்மஹோபகாரியான ஹநுமானுக்கு யான் செய்யவேண்டிய கைம்மாறு ஸர்வஸ்வதானம் ஒன்றுதான் உசிதமாகும். (தொடரும்)

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

स्थानैर्दिव्यैरुपचितगुणां चन्दनारण्यरम्यां
मुक्तासूतिं मलयमरुतां मातरं दक्षिणाशाम् ।
अस्मत्प्रीत्यै जनकतनयाजीवितार्थं च गच्छन्
एकं रक्षःपदमिति सखे दोषलेशं सहेथाः ॥

(பதவுரை) ஸ்தானைர்திவ்யை:- திவ்யதேசங்களான பகவத்க்ஷேத்ரங்களால், உபசிதகுணாம்- மிகப் பெருக்கப்பட்ட குணத்தோடு கூடியதும், சந்தநாரண்யரம்யாம்- சந்தனவநங்களினால், மனத்திற்கு ரம்யமாயும், முக்தாஸூதிம்- (தாம்ரபர்ணீ நதியில்) முத்துக்களை (முக்தர்களைப்) பிறப்பிப்பதும், மலயமருதாம்- மலயமாருதங்களான தென்னல்களின், மாதரம்- உத்பத்தி செய்யும் தாயாயும் உள்ள, தக்ஷிணாசாம்- தெற்கு திக்கில், அஸ்மத் ப்ரீத்யை- இக்ஷ்வாகுவம்சஸ்தர்களான எங்களுடைய இஷ்டத்தை ஸாதிப்பதற்காகவும், ஜநகதநயாஜீவிதார்த்தம் ச கச்சன்- ஜனகராஜன் குமாரியின் உயிரைக் காக்கவும் செல்லும் ஹம்ஸமே, ஸகே- இப்பொழுது எனக்குத் தோழராய்விட்டவரே, ரக்ஷ:பதம் இதி- ராக்ஷஸர்கள் வஸிக்கும் ஸ்தானம் என்ற, ஏகம்- ஒரே ஒரு, தோஷலேசம்- ஸ்வல்பதோஷத்தை, ஸஹேதா:- பொறுத்தருளவேணும்.

(விசேஷவுரை) ராக்ஷஸராஜதாநியான இலங்கைக்கு நீர் தூது செல்லுவது 'ஸமுசிதம்' மிகவும் உசிதம்' என்று முன் ச்லோகத்திலுரைக்கப்பட்டது. ஹம்ஸர்கள் உத்தரமார்க்கமாய் 'தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:' 'ஸோத்வந: பாரம் ஆப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்' என்று ச்ருதிகள் ஓதும் பரமபதத்திற்குச் செல்வர். அங்கிருந்து திரும்பி இந்த ஸம்ஸாரமண்டலத்திற்கு திரும்பமாட்டார். தக்ஷிணமார்க்கத்தில் செல்லுபவர் மோக்ஷத்தை விரும்பாமல் ஸ்வர்க்காதிகளை அபேக்ஷித்து அந்த லோகங்களுக்குச் செல்வர். ஸ்வர்க்காநுபவத்தைத் தரும் புண்யம் க்ஷீணமானதும் அங்கிருந்து நழுவி மாத்யலோகத்திற்குத் திரும்பிவந்து பிறப்பர். ஹம்ஸரான உம்மை தெற்கு திக்காய்ப் போகச் சொல்லுகிறேனே, தெற்குதிக்குமார்க்கம் ஹம்ஸருக்கு ஏற்ற பரமபதத்தைச் சேர்ப்பிக்காதே, அதிலும் இங்கே தெற்குதிக்கில் போகவேண்டியதாக உத்தேசிக்கப்பட்ட இடம் ராக்ஷஸராஜதாநியாயிற்றே. அங்கே வஸிப்பவரெல்லாம் ராக்ஷஸர்கள். அங்கே எப்படி ஹம்ஸர்கள் செல்லலாம் என்று சங்கைகளை உத்ப்ரேக்ஷித்து, உபநிஷத் ப்ரஸித்தமான உத்தரதிக்கு மார்க்கம் பரமபதத்தைச் சேர்ப்பிக்கும் என்பது உண்மையே. ஆயினும் இங்கே நீர் செல்லும் தக்ஷிணதிக்குமார்க்கத்தில் அனேக (பூலோக) பரமபதங்களை திவ்ய க்ஷேத்ராங்களாக நிரம்பியுள்ளன. தாம்ரபர்ணீ தீரங்களில் நித்ய முக்தர்களே ஆசைப்பட்டுப் பிறந்து உலகத்தை நல்ல மார்க்கத்தில் திருப்பி முக்தராகும்படி செய்வார்கள். மேலும் நீர் செல்லும் மார்க்கத்தில் சந்தனவநங்கள் கனத்துள்ளன. நீர் தெற்கு முகமாய்ச் செல்லுகையில் மலயபர்வதத்திலிருந்துசைத்யம், ஸௌரப்யம், மாந்த்யம் என்கிற குணங்களோடுகூடியதென்னல்காற்றுகள் உமக்குஸுகத்தைத் தந்துகொண்டு அபிமுகமாய் வீசிக்கொண்டிருக்கும். மேலும் நீர் செல்லும் தெற்கு மார்க்கத்தில் செல்ல வேண்டிய (உத்தேசிக்கப்பட்ட) ப்ரயோஜனங்கள், இக்ஷ்வாகுகுலத்தோரான எங்களுக்கு ப்ரீதியை உண்டுபண்ணுவதற்காகவும், ஜ்ஞாநிச்ரேஷ்டரும், கர்மச்ரேஷ்டருமான ஜனகமஹா

ராஜருடைய புதல்வியின் உயிரைக் காப்பாற்றுவதுமாகையால், ராக்ஷஸர் வாஸஸ்தானமென்கிற ஓர் ஸ்வல்பதோஷத்தை நீர் பொறுத்தருளவேணும். 'ஏகோ ஹி தோஷோ குண ஸந்நிபாதே நிமஜ்ஜதீந்தோ: கிரணேஷ்விவாங்க:' 'அநேக குணங்கள் கூடிச் சேர்ந்திருக்கையில் ஏதோ ஒரு தோஷம்மட்டும் இருந்தால் அது சந்த்ரனுடைய கணக்கற்ற குணங்களில் சந்த்ரனிடமுள்ள களங்கத்தைப்போல முழுகிப்போய்விடும்' என்கிற ந்யாயத்தை நினைக்கவேணும். இப்படி ஸமாதானம் கூறுவதுபோல இந்த ச்லோகம் அமைந்துள்ளது.

ஸ்தானைர்திவ்யை:— பன்மையால் அநேக திவ்யஸ்தானங்களாலேயே நிரம்பியுள்ளது தெற்குதிக்பாகம். ஒரு லங்காஸ்தானம் என்கிற தோஷம்தானே உள்ளது என்று கருத்து. உத்தரமார்க்கத்தால் அடையவேண்டிய பரமபதத்தை 'திவ்யம் ஸ்தானம்' 'திவ்யம் பதம்' என்பர். இங்கே செல்லும் தக்ஷிணதிக்கு மார்க்கமே அநேக பூலோக வைகுண்டங்கள் நிரம்பியது. 'ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதேன்' 'வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:' 'இந்திரலோகமாளும் அச்சுவைப் பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே' என்பர் திவ்யக்ஷேத்ர அர்ச்சாரஸிகர். ஹம்ஸத்தின் ப்ரீதிக்காக மேலே திருமலை, பெருமாள் கோவில், கோவில் முதலிய க்ஷேத்ரங்களின் மஹிமையையும் அவற்றில் தமக்குள்ள ருசியையும் விஸ்தாரமாய் வர்ணிக்கப்போகிறார். தாம் ஆராதித்துவந்து அரங்கநகரில் சேஷபீடத்தில் எழுந்தருளப்போகிற சேஷசாயியின் திவ்ய விக்ரஹத்தில் உள்ள நிரதிசய ரஸத்தை 'சேதோதாவத்யுபஹிதபுஜம் போகி போகிசயானம்' என்று மேலே வர்ணிக்கிறார். ஹம்ஸர்களுக்கும் அப்படியேதான் அர்ச்சைகளில் ரஸமிருக்கும்.

உபசிதகுணம்— இந்த திவ்யக்ஷேத்ரங்களாலும் அர்ச்சாமூர்த்திகள் ஸந்நிதானத்தாலும் தக்ஷிணதிக்கிற்கு குணங்கள் மிகவும் பெருக்கப்பட்டுள்ளது. இப்படி குணங்கள் குவிந்துள்ள குணஸந்நிபாதத்தில் ஒரே ராக்ஷஸஸ்தானம். அது தோஷலேசம். இந்த திவ்ய ஸ்தானங்களால் குணம் பூயிஷ்டமாக நிரம்பியிருக்கிறது. ஏகம், என்பதற்கும் லேசம் என்பதற்கும் எதிர்த்தட்டு.

சந்தாரண்யரம்யாம்— சந்தநாரண்யங்களால் மனதையும், நேத்ர, க்ராணங்களையும்கவருவதாயுளது— 'உபசிதகுணம்', என்கிறதால் உயர்ந்த திவ்ய குணங்களின் பரிமளம் வீசுவதை ஸூசித்தார். சந்தனவநங்களால் ஸுகந்தங்கள் வீசுவதை இங்கே ஸூசிக்கிறார்.

முக்தாஸூதிம்— தாம்ரபர்ணீநதியில் முத்துக்கள் உண்டாவதாகச் சொல்லுவர். முத்துக்களைப் பெறுவது அந்த நதி. இதனால் தாம்ரபர்ணீநதிதீரதேசத்தின் மஹிமையை மஹர்ஷிகள் புகழும் வசநங்களை ஸூசிக்கிறார். நித்யமுக்தர்களான திவ்யஸூரிகளே இங்கே ஆழ்வார்களாகவும் ஆசார்யர்களாகவும் அவதரிப்பர். மேலும் இந்ததேசத்தில் பிறக்கும் பகவானிடம் மஹா பக்தர்களாய் முக்தர்களாவார். இங்கு பிறவியும் வாஸமும் முக்தி ஸித்திப்பதற்கு உபகாரமாயிருக்கும். உத்தரதிக்கு மார்க்கத்தில் சென்று முக்தராகப் பரமபதம் சேரலாம். இங்கோவென்றால்பரமபதத்திலுள்ளவர்களே ஆசைப்பட்டு வந்து பிறக்கிறார்கள்.

மலயமருதாம் மாதரம்— மலயமாருதங்கள் என்கிற தென்னல் காற்றுகளை பிறப்பிக்கும் தாய் தக்ஷிணதிக்கு. 'மந்தம் மந்தம் நுததி பவநச்சாநுகூலோ யதா த்வாம், என்று மேகஸந்தேசத்தில் 9ம் ச்லோகத்தில் பாடப்பட்டது. 'மலயமருதாம் மாதரம்' என்று இந்த 9ம் ச்லோகத்தில் அதையுமநுஸரிக்கும் ரஸம் ரஸ்யம். அங்கே உத்தரதிக்கில் அளகாபுரியை நோக்கி மால்யவான்கிரியிலிருந்து மேகம் தூது செல்லவேணும். அந்த மேகத்திற்கு மலயமாருதத் தென்னல்கள் வீசாது. 'காற்று மெல்ல மெல்ல நீர் வடக்கே செல்வதற்கு அநுகூலமாய் வீசுகிறது' என்று தெற்கேயிருந்து மந்தமந்தமாய் காற்று அநுகூலமாய் வீசுவதை மேகச்லோகம் பாடிற்று. இங்கே எதிர் திக்காக தெற்கிலிருந்து எதிர்க்காற்றாக தக்ஷிண மாருதங்கள் வீசினாலும் அது மிகஸுகமாயும் ச்ரமஹரமாயுமிருக்குமென்று ரஸம்.

தக்ஷிணாசாம்- 'ஆசா' என்பதற்கு 'திக்கு' என்றும், 'ஆசை' என்றும் பொருள். இக்ஷ்வாகுநாதரான ராமனுக்கு ப்ரியத்தைச் செய்யும் ஜாநகிக்கு உயிர்ப்பிச்சைக் கொடுக்கவும், ஆசையினால் இங்கே ஹம்ஸர் தக்ஷிணாசையில் செல்லுகிறார். சரணாகதரக்ஷணரஸத்தில்ஈடுபட்டவரான ஹம்ஸருடைய ஆசை மிக தக்ஷிணமானது 'பரச்சந்தானுவர்த்தித்வம் தாக்ஷிண்யம்.' ஆர்த்தத்ராணவ்ரதத்தைக்கொண்டவர் சுத்த தவள ஹம்ஸர். அதனிலும் அரும் பெரும் தர்மமில்லை. ஆர்த்தர் இருக்குமிடம் தேடிப் போகவேணும். அவர்கள் கொடியவரான சத்ருக்களின் நடுவிலிருந்தால் அங்கே கூசாமல் சென்றுதான் ஆர்த்தரைக்காப்பாற்றவேணும்.

அஸ்மத்ப்ரீத்யை-முன் ச்லோகத்தில் கூறிய நம் குலப் பெரியோர்களை முன்னிட்டு அவர்களையும் சேர்த்துக் கொண்டு எங்களெல்லோருடைய பிரீதிக்காக என்று கருத்து.

ஜநகதநயாஜீவிதார்த்தம் ச—ஓர் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற- ஜநகரின் பெண் என்ற ஏற்றமுடையவளைக் காப்பாற்ற— தம் மாமனாரான ஜநகமஹாராஜருடைய ப்ரீதியுமேற்படும்.

கச்சன்— இப்படி இரண்டு ப்ரயோஜனங்களை உத்தேசித்து இச்சித்து தக்ஷிணாசையில் செல்லும் நீர்.

ஏகம்-,ஏகோ ஹி தோஷோ குணஸந்நிபாதே என்கிற ந்யாயத்தை இதனால் ஸூசிக்கிறார்.

ரக்ஷ:பதம் இதி— ராக்ஷஸர்கள் வஸிக்கும் ஸ்தாநம்; ராக்ஷஸராஜனுடைய பட்டணம், என்கிற ஒரே தோஷலேசம் உளது.

ஸகே- எனக்கு நீர் ஸகாவாய்விட்டீர். ஸகாவான நீர் இதைப் பொறுத்தே தீரவேணும். ரக்ஷ:பதமாயினும் ஸீதாயா: பதமுமாகுமென்பதும் பதமென்பதால் ஸூசிக்கப்படுகிறது.

தோஷலேசம்— குணபூயிஷ்டதையை 'உபசிதகுணம்' என்று வர்ணித்தார். இங்கே உள்ள ஒரே ஒரு தோஷமும் ஸ்வல்பமான தோஷமே. கௌரவலாகவங்களை நிறுத்துக் காட்டுகிறார். ஸஹேதா:— நீர் கவனியாமல் ஸஹிக்கவேணும். (தொடரும்)

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,

மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31–12–56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்ரி.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மாசி மாதம் 29ந் தேதி மத்தியானம் ஜூளியாவிலிருந்து புறப்பட்டு 10 மைல் உள்ள பலாசனர் எழுந்தருளினார். 30ந் தேதி ராத்திரி புறப்பட்டு சேந்துவா (14 மைல்) எழுந்தருளினார். பங்குனிமீ 2ந் தேதிவரை அவ்விடம் எழுந்தருளியிருந்தார். 2ந் தேதி ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள ஜூலிவானிமா எழுந்தருளினார். அன்று அவ்விடம் திருமுடிவிளக்கமாயிற்று. அவ்வூரில் தங்கியிருந்த இடத்திலிருந்து சுமார் 3 பர்லாங்கு தூரத்தில் நதம் (கிழக்கிலிருந்து மேற்காக ஓடுகிற பெரிய ஆறு) ஓடுகிறது. அதற்கெழுந்தருளி நீராட்டமும் அனுஷ்டானமுமாயிற்று. பங்குனி மாதம் 3ந் தேதி ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள பாடுபாட்டி எழுந்தருளினார். பங்குனி மாதம் 4ந் தேதி அவ்விடமிருந்து புறப்பட்டு 16 மைல் உள்ள கால்காட் என்ற ஊருக்கு (நர்மதாநதி தீரத்திற்கு) எழுந்தருளினார். பங்குனி மாதம் 5ந் தேதி, விஷ்ணுபுராணத்தில் 'நர்மதாதடே' என்று விஷ்ணுபுராணத்தின் விஷயங்கள் அவதரித்ததாகச் சொல்லப்பட்ட ஏற்றம் உடைய தீர்த்தமாகையால் அந்த நர்மதா தீர்த்தம் கொண்டு பெரிய பெருமாளுக்கும், ஸ்ரீ கண்ணனுக்கும் திருமஞ்சனம் நடக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி திருமஞ்சனம் நடந்தது. பங்குனி மாதம் 4ந் தேதி ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரம் காலக்ஷேபம் சாற்றுமுறை நடந்தது. அன்றே ஸ்ரீகீதாபாஷ்யமும் ஆரம்பிக்கப்பட்டு மத்தியாஹ்னம் பகவத்விஷய காலக்ஷேபமும் ஆரம்பிக்கப்பட்டது.

அனேகமாக பழைய ஆராதகர்கள் இரண்டொருவர் இருக்கும்பொழுதுதான் அப்போதைக்கப்போது வேண்டிய புது ஆராதகர்கள் நியமிப்பது வழக்கம். ஆனால் இசமயம் சுமார் 15 நாட்கள் ஆராதகர்கள் இல்லாமல் ஸ்ரீ அழகியசிங்கரே எல்லா ஆராதனத்தையும் நடத்திவரும்படி இருந்தது. ஆகையால் பங்குனி மாதம் முதலிலிருந்தே புதிய ஆராதகர்கள் மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டு ஆராதனம் செய்துவருகிறார்கள். 5ந் தேதி ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள குஜஜிரி எழுந்தருளினார். அவ்விடம் ஸ்வாதி திருமஞ்சனம் நடந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள மான்பூர் எழுந்தருளினார். பங்குனி மீ 8உயும் அங்கேயே எழுந்தருளியிருந்தார். அன்று ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள மாஹூ எழுந்தருளினார். மாஹூவிலிருந்து புறப்படும்போது வீதி வழியாக எழுந்தருளவேணுமென்றவ்வூரிலுள்ளவர்கள் பிரார்த்தித்தார்கள். விசேஷமாக பாண்டுவாத்தியம் ஸெட்டுகளுடன் வீதிவழியாக உபகாரம் ஸமர்ப்பித்தனுப்பி வைத்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள இந்தூர் எழுந்தருளினார். இந்தூரில உள்ள பிரகலாததாஸ் முதலிய ஸ்ரீவைஷ்ணவ ஷேட்டுகள் அவசியம் வீதியில் பெருமாளுடன் எழுந்தருளவேணுமென்றும் ஸ்ரீகண்ணனுக்கு வீதி உத்ஸவமாகவே நடத்திவைக்கவேணுமென்றும் மிகவும் பிரார்த்தித்ததின் பேரில் மறுநாள் ஸாயங்காலம் நடக்கட்டும் என்று நியமனமாயிற்று. பெருமாள் வீதி உத்ஸவமாக ஸ்ரீ அழகியசிங்கருடன் எழுந்தருளுகிற விஷயத்தை மிகவும் உத்ஸாஹத்துடன் முன்னதாகவே விசேஷ அறிவிப்பும் செய்து ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். ஸ்ரீகண்ணனை தங்கப் பல்லக்கில் தங்க சப்பரத்தில் எழுந்தருளும் ரீதியில் எழுந்தருளப் பண்ணினார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப் பல்லக்கில் எழுந்தருளியாயிற்று. பெருமாள் எழுந்தருளும் வீதிகளிலும் மாடிகளிலும் ஓரங்களிலும் ஆஸ்த்ரீபாலம் ஜனங்கள் திரளாக நின்று பெருமாளை ஸேவித்தார்கள். பார்க்கிறவர்களுக்கு வைசாகோத்ஸவம் முதலிய ப்ரஸித்த உத்ஸவங்களில் ஜனங்கள் வீதிகளிலும் ஓரங்களிலும் வீடுகளிலும் மாடிகளிலும் நின்று

கொண்டு பெருமாளை ஸேவிக்கும் ஸேவையை ஒத்திருந்ததென்று சொல்லலாம்படியிருந்தது.

ஆங்காங்கு பெரிய பிரமுகர்கள் வீட்டுவாசலில் விசேஷ ஸம்பாவனைகளும் விசேஷ உபகாரங்களும் ஆரத்தியும் மற்றுமுள்ள இடங்களிலும் உபகாரமும் ஸம்பாவனைகளும் ஆரத்தியும் பண்ணினார்கள். வீதிகளில் எழுந்தருளும்போது 'ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பகவான்கி ஜே, ஸ்ரீ அஹோபிலமடாதீச ஸ்வாமிஜீ மஹராஜ்கி ஜே' என்று விசேஷமாக கோஷித்துக்கொண்டு எழுந்தருளப்பண்ணினார்கள். இத்துடன் 'ஜய யதிராஜ பணிராஜ அவதார மணி! ப்ரபுலபாஷண்ட தமோ ஹரணபாநோ! விஜயீ பவ! விஜயீ பவ!! விஜயீ பவ!!! என்ற கோஷங்களையும் பண்ணிக்கொண்டு போனார்கள்.

இம்மாதிரி கோஷங்கள் சோலாப்பூர் முதலிய இடங்களில் ஸ்ரீ அழகியசிங்கர் வீதியில் எழுந்தருளும்போது நடந்திருந்தாலும் இந்தூரில் விசேஷமாக இருந்தது.

வட இந்தியாவில் பௌத்த ஜைன மதங்கள் விசேஷமாகப் பரவியிருந்தகாலத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் எழுந்தருளி அவைகளை நிரஸித்ததற்கறிகுறியாக அவர் விஷயமான இந்தக் கட்டியத்தை ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் 'பாஷ்யகார: புநர்பூமௌ பாஷ்யப்ரவசநாதராத் | யத்ரூபேணாபவத் தஸ்மை சடகோபாய மங்களம்' என்றும் பிறகு 'ஸ்ரீமான் ராமாநுஜார்யோ யதிபதிரகிலாம் ஸ்த்ராதுகாம:....... பூயஸ் ஸாக்ஷாதுத்ப்ரேக்ஷமாணோ உபவதிதி ஜயதாத் ஸ்ரீநிவாஸோ யதீந்த்ர:' என்று ஸுப்ரபாதாரம்பத்திலும் அநுஸந்தித்துவருகிற க்ரமப்படி) ஸ்ரீ அஹோபிலமட ஆஸ்தானத்தில் அபிஷிக்தரானவர்கள் விஷயத்திலும் உபயோகப்படுத்திவருவதிலிருந்து இவர்களுடைய ஸம்ப்ரதாய சிரத்தை எவ்வளவு ஓங்கி இருக்கிறது என்பது தெரிகிறது என்று ஸாதிக்கும்படியிருந்தது. பிராஹ்மணர்களும் கொஞ்சம் செல்வாக்கும் தனமும் உள்ளவர்கள்கூட சிகை வைத்துக்கொள்ளவும் திருமண் இட்டுக்கொள்ளவும்கூட கூச்சம் கொண்டிருக்கும் தேசகாலங்கள் போலில்லாமல் இவ்வூரில் கொஞ்சம் விஷயம் தெரிந்த ஸேட்டுகளும்கூட பட்டையாயும் பளிச்சென்றும் திருமண்காப்புக்களுடன் வெள்ளித் தடி சத்ரசாமரங்கள் முதலிய பிருதுகளையும் எடுத்துக்கொண்டு வீதிகள்தோறும் விடாமல் கோஷம் செய்துகொண்டு அநுயாத்ரையாக வந்து அவர்களுக்குள் ஆஸ்திக்யதையையும் ஆசார்ய பக்தியையும் கூச்சமில்லாமல் வெளிக்காட்டினார்கள். பங்குனி மீ 12உ பிருந்தாவனத்தில் ஸ்ரீ பகவத்ராமாநுஜாசாரியர் பீடாதிபர் என்று சொல்லப்படுகிற ஸ்ரீரகுநாதாசாரியர் என்பவர் ப்ரஹ்மசாரி ஆச்ரமஸ்தர் ஸ்ரீ அழகியசிங்கரையும், பெருமாளையும் தெண்டன் ஸமர்ப்பிக்க தன்னுடைய பரிஜனங்களுடன் வந்தார். ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு தான் நெடுக ஸஞ்சாரம் செய்துகொண்டுவருவதாயும், தங்களைப்போலில்லாமல் ப்ராசீனரீதியிலேயே ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரம் நடத்துவது ரொம்ப சிலாக்யமென்றும் கொண்டாடிவிட்டு காசியில் முக்யமாக பெரிய ஸபை கூட்டி நம்முடைய ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஸ்ரீ அழகியசிங்கரும் ப்ரதிஷ்டாபனம் பண்ணவேண்டுமென்றும் அது சமயம் தெரிந்தால் தானும்கூட வருவதாகவும் தனக்கு ஸ்ரீ தேசிகன் க்ரந்தங்களில சிலது மனப்பாடமாக வருமென்றும் சொல்லி தான் போன இடங்களில் தனக்கு ஸ்வாகதமும், அபிநந்தனமும் செய்த பத்ரிகைகளை ஸமர்ப்பித்து ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டுப் பெருமாளையும் ஸேவித்துவிட்டுப் போனார். உஜ்ஜயினில் மேளா வரையில் இருந்து ஆங்காங்கு உபந்யாஸங்கள் செய்துவிட்டுப் பிறகு ஸ்வஸ்தானம் இருப்பிடம் போகப் போவதாக விஜ்ஞாபனம் செய்தார்.

இந்தூரில் பங்குனி மீ 13உ வரையில் எழுந்தருளி இருந்தார். நான்கு நாட்களும் விசேஷமாக ஆராதித்தார்கள். 13உ செவ்வாய்க்கிழமை ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள க்ஷிப்ரா நதிக்கரையிலுள்ள க்ஷிப்ரா என்கிற கிராமத்திற்கு எழுந்தருளியாயிற்று. 14உ புதன்கிழமை மத்தியாஹ்னம் புறப்பட்டு

10 மைலிலுள்ள தேவாஸுக்கு எழுந்தருளியா யிற்று. ஸ்ரீ கோவர்த்தனதாஸ் ஸஹோதரர்களும், அவர்கள் தகப்பனரும் ஆராதித்தார்கள். அன்று பிரதோஷாராதனம் நடந்தது. 15வயன்று ராத்திரி புறப்பட்டு 11 மைல் உள்ள நர்வா என்று கிராமத்திற்கு எழுந்தருளியாயிற்று. 16வ ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள உஜ்ஜயினிக்கு எழுந்தருளினர்.

முத்தி தரும் நகர் ஏழில் பரிகணிதமான அவந்திகா என்று சொல்லப்பட்டதுதான் ஜைனுதி மதஸ்தர்களான ராஜாக்களின் ஆட்சி காலத்தில் உஜ்ஜயினி என்று *பெயருள்ளதாக ஆனதாகக் கூறுகிறார்கள். நகரேழில் இந்த நகர் விஷ்ணுவினுடைய பாதஸ்தானமாகச் சொல்லப்பட்டிருப்பதாயும் இதில் வராஹாவதாரம் பண்ணின பகவானின் திருமேனியிலிருந்து உண்டான க்ஷிப்ரா நதி (இதை ஸிப்ரா என்றும், பயோஷ்ணீ என்றும் சொல்லுகிறார்கள்.) உத்தரவாஹுநியாக பிரவஹிக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

இந்த வருஷம் மேஷஸங்க்ரமணத்திலிருந்து ஒரு மாஸகாலம் விசேஷ புண்யகாலமென்றும் அதைத்தான் மேளா என்று சொல்வதென்றும் அதில் லக்ஷக் கணக்கான ஜனங்கள் கூடுவார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அதற்காக விசேஷ ஏற்பாடுகளும் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கிருந்த இரண்டு நாளும் நதிக்கரையிலேயே எழுந்தருளியிருந்தபடியால் இரண்டு நாளும் இரண்டு வேளையிலும் நதியிலேயே நீராட்டம் கண்டருளும்படி இருந்தது.

அவ்வூரில் காஞ்சி மாதிரி சைவக்ஷேத்திரம் விஷ்ணு க்ஷேத்திரம் என்று பிரிக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லுகிறார்கள். விஷ்ணு க்ஷேத்திரம் என்று சொல்லப்பட்ட இடத்தில்தான் ஸாந்தீபினி ஆச்ரமம் இருந்ததாயும் அவ்விடத்தில்தான் ஸ்ரீகிருஷ்ணன் வித்யாப்யாஸம் செய்ததாயும் காண்பிக்கிறார்கள். அவ்விடத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்ததின்பேரில் 18வ ஞாயிற்றுக்கிழமை காலை அபிகமன ஆராதனம் ஆனவுடன் அவ்விடத்திற்கு எழுந்தருளியாயிற்று. வரும்போது வீதியில் ஸம்பாவனை உபகாரம் ஆரத்தி ஸமர்ப்பித்தார்கள். இரண்டு நாட்களும் பகவான்தாஸ் முதலிய ஸேட்டுகள் ஆராதித்தார்கள். அங்கிருந்து ஆக்ரா வழியாக ஹ்ருஷீகேசம் எழுந்தருளுவதானுல் கிட்டத்தட்ட இருநூறு மைல்கள் குறைகின்றன என்ற திருவுள்ளத்தினுல் ஆக்ரா வழியாக எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியாகி இருந்தது. ஆனுல் அவ்விடம் இந்தூரிலிருந்து வந்த ஸ்ரீ ப்ரஹ்லாததாஸ் ஸேட்டும் மற்றும் அல்வூரிலுள்ள பிரமுகர்களும் அந்த வழி அவ்வளவு திறமான பந்தோபஸ்து உள்ள வழி இல்லையென்றும் கொஞ்சம் சுற்றாக இருந்தாலும் தங்களைப்போலுள்ள பக்தர்களும் தங்களைச் சேர்ந்தவர்களாயும் உள்ள ஸ்ரீவைஷ்ணவஸேட்டுகள் வஸிக்கும் புஷ்கரமார்க்கந்தான் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திதார்கள். பக்தியுடன் பிரார்த்திக்கிறவர்களுடைய பிரார்த்தனையைத் தட்டாதவனுயும் பரித்ராணுய ஸாதூநாம் என்று அருளிச்செய்தவனுமான எம்பெருமானுடைய நியமனமும் அப்படியே இருந்தபடியால் அவர்களுடைய பிரார்த்தனையின்பேரில் புஷ்கரம் வழியாகவே எழுந்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றி 18வ ராத்திரி புறப்பட்டு 16 மைல் தூரமுள்ள இங்கோரியாவிற்கு எழுந்தருளினர். பங்குனிமீ 19வ தெலுங்கு வருஷப் பிறப்பு (யுகாதி பண்டிகை) அன்று ராத்திரி அவ்விடம் விட்டு எழுந்தருளுவதாக இருந்தும் தெலுங்கு போகிகளுடைய நிர்ப்பந்தத்திலுைம் அவிதேயதையாலும் அவ்விடத்தைவிட்டு எழுந்தருளமுடியவில்லை. 20வ செவ்வாய்க்கிழமை ராத்திரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள பார்நகர் என்ற ஊருக்கு எழுந்தருளினர்.

அடிக்கடி பல்லக்கு போகிகளினுல் ஏற்படும் சிரமங்களும் பல்லக்கில் எழுந்தருளும்போது ஏற்படும் குலுக்கல் முதலிய சிரமங்களையும்

* பாதுகாஸஹஸ்ரத்தில் 'மத்வா த்ருணுய' என்கிற ச்லோகத்தில் உஜ்ஜயினியும் அவந்தியும் என்று சேர்ந்தாப்போல் சொல்லியிருப்பதால் மேலே சொல்லுவது பொருந்தாது.

பற்றி ஸாதிக்கும்போது 'ஜாதிஸ்மரோ உஸௌ பாபஸ்ய க்ஷயகாமம் உவாஹ தாம்' என்று மஹாயோகியான ஆதிபரதர் சிபிகாவஹனம் பண்ணினாற்போல் சிபிகாரோஹணமும் பாபக்ஷயத்தை உத்தேசித்து செய்யவேண்டிவருகிறது. சிபிகாரோஹணம் புண்யபலமென்று சிலர் நினைத்தாலும் முமுக்ஷு விஷயத்தில் அந்தப் புண்யத்தையும் (அநிஷ்டபலஜனகமாகையால்) பாபமென்று சொல்லுவது பொருத்தமென்று ஸாதிக்கும்படி இருந்தது. யாதவாப்யுதயத்தில் 'யத்ருச்சாகதமைச்வர்யம் ஆந்ருண்யருசிரந்வபூத்' என்கிறபடி ஆந்ருண்யத்திற்காகவே அதை அங்கீகரித்து அனுபவிக்கவேண்டியிருக்கிறது என்றும் ஸாதிக்கும்படி இருந்தது.

அதேமாதிரியாக வடதேசயாத்திரையில் கஷ்டங்களையும், அலௌகர்யங்களையும் கைங்கர்யபரர்களும் மற்றும் பலர்களும் பம்பாயிலிருந்து விஜ்ஞாபித்து வந்தார்கள். ஸ்ரீகீதா பாஷ்யம் இரண்டாம் அத்யாயம் காலக்ஷேபம் நடக்கும்போது 'அத சேத் த்வமிமம்' என்று ஆரம்பிக்கும் ச்லோகங்கள் வரும்போது அர்ஜுனனுக்கு யுத்தத்தைக் கர்த்தவ்யமாக உபதேசிக்கிறப்போலிருக்கிறதென்று ச்லோகங்களிலும் பாஷ்யங்களிலும் அதற்குத் தகுந்தாற்போல் சில பதங்களை ஆவாபோத்வாபம் பண்ணி கடைசியில் 'பயாத்யா நாதுபரதம் மம்ஸ்யந்தே த்வாம் குருத்தமா: | யேஷாம் ச த்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி லாகவம் ||' என்று ஸாதித்துவிட்டு அதற்கு விவரணமாக மூன்று ஸ்ரீ அழகியசிங்கர்கள் விசேஷ கடாக்ஷம் பண்ணியதுடன் விசேஷித்து ஸ்ரீ இஞ்சிமேடு அழகியசிங்கர் வடதேசயாத்திரை நடக்குமென்று அனுக்ரஹித்திருக்கிறபடியால் நிர்விக்னமாக வடதேசயாத்திரையை ஸ்ரீ பார்த்தஸாரதி தன்னுடைய ஸத்யஸங்கல்பதைக்கு அனுகுணமாக நடத்திவைப்பனென்று ஸாதிக்கும்படியாக இருந்தது.

ஸஞ்சாரத்தில் கூட வருகிறவர்களுக்குத்தான் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்த விஷயத்தின் யாதார்த்யமும் பெருமாளே ஸஞ்சாரத்தை நடத்திவைத்துக் கொள்கிறார் என்ற விஷயமும் அப்போதைக்கப்போது காதலாமலகமாக விளங்கிவரும்.

பங்குனி மீ 21வ பார்கநகரிலிருந்து ராத்திரி புறப்பட்டு 15 மைலிலுள்ள முல்தான் எழுந்தருளினர். 22வ ராத்திரி புறப்பட்டு டாராட் என்கிற இடத்திற்கு எழுந்தருளினர். 23வ ராத்திரி புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள ரட்லம் எழுந்தருளினர்.

தாராட்டிக்கே ரட்லத்திலிருந்து பகவதி ப்ரஸாத் மால்பானி தன்னுடைய பங்களாவிற்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்துப் போனபடியால் அவருடைய பங்களாவிற்கு எழுந்தருளினர். அவர் கட்டணம் கட்டி அன்றும், மறுநாளும் ஆராதித்தார். மற்ற ஊர்கள் மாதிரி தங்கள் ஊரிலும் வீதிகளில் எழுந்தருளவேண்டுமென்று ரொம்பவும் ப்ரார்த்தித்ததின்பேரில் 25வ ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் பெருமாள் பல்லக்குடனும் ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப்பல்லக்கில் வீதிகளில் எழுந்தருளியாயிற்று. இம்மாதிரி ஊர்வலங்களில் முன்னடி புருஷர்கள் ஜேகோஷம், முன் எழுதியிருந்த கட்டியம், ஸ்தோத்ரரத்னம் தெரிந்தவர்கள் ஸ்தோத்ரரத்னபாராயணம் இவைகளைச் செய்துகொண்டும் பின்னடி ஸ்த்ரீகள் ஹிந்தியில் பாடல்களைப் பாடிக்கொண்டும் ஒரு வீதி விடாமல் கூடவே உத்ஸாஹத்துடன் வந்து கொண்டிருந்தார்கள். ஊரின் ஜனத்தொகைக்குத் தக்கபடி முன்பின் கோஷ்டிகள் ½ பர்லாங் முதல் ½ மைல் தூரம் வரையிலிருந்துகொண்டு இருந்திருக்கும். 25வ ராத்திரி ரட்லத்திலிருந்து 12 மைல் தூரமுள்ள மேவாஸ் எழுந்தருளினர். 26வ ராத்திரி மேவாஸிலிருந்து புறப்பட்டு 12மைல் தூரமுள்ள ஜவாரா எழுந்தருளினர். அவ்விடத்தில் ஸ்ரீராமநவமியை உத்தேசித்து பெரிய பெருமாள் கண்ணன் ஸீதாலக்ஷ்மணஸமேத ஸ்ரீராமபத்ரன் இவர்களுக்குத் திருமஞ்சனம் நடந்தது. ஸ்ரீமத்ராமாயணமும் ஸேவிக்கப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கரால் விசேஷார்த்தங்கள் ஸாதிக்கப்பட்டு மத்தியானம் ஆராதனம் நடந்து ததீயாராதனமும் நடந்தது. 27வ ராத்திரி புறப்பட்டு 11

மைல் தூரமுள்ள தேவதார் எழுந்தருளினர்.

இந்தப் பக்கங்களில் புருஷர்களும் ஸ்த்ரீகளும் தங்கள் புத்தியால் மஹாத்மாக்களென்று கருதப்பட்டவர்களைப் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிப்பதும் தங்களுடைய விபவங்களுக்குத் தக்கபடி பாதபூஜை செய்வதும் (அதாவது குங்குமப்பூ பச்சைக் கற்பூரம் கலந்த தீர்த்தத்தால் பாதங்களைக் கழுவி அந்த தீர்த்தத்தை ப்ரோக்ஷித்துக்கொள்வதும் எல்லாருக்கும் ப்ரோக்ஷிப்பதும் புஷ்பங்களால் அர்ச்சித்து நெற்றியில் திலகமிட்டு நெய்யில் எற்றிய பஞ்சுத் திரியாலும் கற்பூரத்தாலும் ஆலத்தி எடுத்து உபஹாரம் ஸமர்ப்பித்து ஸம்பாவனை செய்து பகவந்நாமகீர்த்தனமும் ஜயகோஷமும் செய்வதும் உத்ஸாஹமாக ஊர்வலம் செய்துவைத்துத் தொடர்ந்து வருவதும் வழக்கமாதலால் அந்தப்படி செய்ய ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருக்கும்போதும் வீதியில் எழுந்தருளும்போதும் செய்யத் தங்களுக்குள்ள ஆஸ்தையைத் தெரிவித்தாலும் ஸ்ரீ அழகியசிங்கர் பாதங்களைத் தொடுவதையும் கழுவுவதையும் திலகமிடுவதையும் அனுமதிக்காதபடியால் மற்றதுகளை ஆங்காங்கு செய்கிறார்கள். ரட்லத்தில் ராமசந்த்ரமந்திர் வாசலில் எழுந்தருளும்போது அங்கு ஸந்நிதி மஹந்து பல்லக்கு ஸமீபம் வந்து விசேஷ ஆரத்தி ஆராதனை ஸம்பாவனைகளைச் செய்தார். இம்மாதிரி உத்ஸவங்களில் வீதிகளில் கூட வருகிறவர்கள் ஒருவருக்கொருவர் குங்குமங்களை நெற்றியில் பூசிக்கொள்வது வழக்கமாதலால் அந்தப்படி செய்து வந்தார்கள். அதைப் பார்த்து 'குங்குமமப்பிக் குளிர்சாந்தமட்டித்து' என்கிற பாசுரம் ஜ்ஞாபகம் வருகிறதென்று ஸாதித்தாயிற்று. அத்துடன் வீதிகளில் ஓரங்களிலும் வீட்டுக் கொரடுகளிலும் மாடிகளிலும் ஸ்த்ரீபுருஷர்கள் நின்றுகொண்டு பெருமாள் எழுந்தருளும்போது பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் உத்தேசித்து அஞ்சலி பண்ணுவதைப் பார்த்து இந்த காலத்தில் இப்பொழுதே இப்படி இருந்தால் விபவத்தில் சக்ரவர்த்தித்திருமகன் எழுந்தருளும்போது 'தேஷாமஞ்ஜலிபத்மாநி ப்ரக்ருஹீதாநி ஸர்வச:' என்றபடியுள்ள அயோத்யைவாஸிகள் எப்படி இருந்திருப்பார்கள் என்று ஸாதித்துவிட்டு இந்த தேச ஜனங்களின் தெய்வபக்தி ரொம்ப மெச்சத் தகுந்தது என்றும் ஸாதிக்கும்படி இருந்தது.

அவர்களுடைய நாமஸங்கீர்த்தனத்தைக் கேட்டுவிட்டு 'அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை: । புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகைரிவ ॥' என்ற ச்லோகத்தையும், 'நாம்நோஸ்தி யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே । தாவத் கர்த்தும் ந சக்நோதி பாதகம் பாதகீ ஜந: ॥' ... 'நாம்நவஸ்தே யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே । ஸ்வபசோऽபி நர: கர்த்தும் க்ஷமஸ்தாவந்ந கில்பிஷம் ॥', என்ற ச்லோகத்தையும் ஸாதிக்கும்படி இருந்தது. இந்த வசநங்களைக் கொண்டுதான்போலும் ஸ்ரீ ஸந்நிதியிலும் பத்து நிமிஷகாலமாவது பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளத்தினால் கொஞ்ச நாட்களாக ராத்திரி ஆராதனம் முடிந்ததும் பெருமாள் பல்லக்கிற்கு எழுந்தருளும் அவகாசங்களில் லக்ஷ்மீநாஸிம்ம! நாஸிம்ம! ஸ்ரீமந்நாஸிம்ம! என்கிற பெருமாள் திருநாமங்களை தாளத்துடன் கீர்த்தனம் செய்துவருகிறபடி. அப்பொழுது அநேகமாக ஸ்ரீஸந்நிதி கைங்கர்யபரர்கள் எல்லோரும் அவ்வூரிலுள்ள ஸேவார்த்திகளும் கைத்தாளங்களுடன் அனுகீர்த்தனம் செய்துவருகிறார்கள். 'ஹரே' என்ற ஸம்போதனத்திற்கனுகுணமாக நாஸிம்ஹநாமகீர்த்தனம் ரொம்பவும் பொருந்தினதென்றும் 'உன்னைச்சிந்தைசெய்து உன் நெடுமாமொழி இசை பாடியாடி என் முன்னைத் தீவினைகள் முழு வேரறிந்தனன் யான் உன்னைச் சிந்தையினாலிகழ்ந்த இரணியனகல் மார்வம் கீண்ட என் முன்னைக் கோளரியே முடியாததென் எனக்கே' (திருவாய்மொழி 2 பத்து 6 திருப்பா) என்கிற பாசுரத்திற்கு ஒப்பவும் இந்த மூன்று திருநாமங்களும் அமைந்திருப்பதால் இதை இசை பாடியாடுவது ரொம்பவும் பொருத்தம் என்று ஸாதிக்கும்படியிருந்தது. அதாவது உன் மொழி– நாஸிம்மா என்ற நாமம், உன் மாமொழி– (மா–லக்ஷ்மீ) ஸ்ரீமந்நாஸிம்ம, நெடுமொழி–லக்ஷ்மீநாஸிம்ம என்ற நாமம், ஆக கோளரியே உன் நெடுமாமொழி லக்ஷ்மீநாஸிம்ம, ஸ்ரீமந்நாஸிம்ம, நாஸிம்ம என்ற திருநாமங்கள். இதை இசைக்கனுகுணமாக வைத்துப் பாடியாடுகிறோம் என்பது என்று விவரிக்கும்படி இருந்தது.

(தொடரும்)

श्रीः

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

श्री शारीरकार्चना

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

(द्वितीयाध्यायप्रथमपादः)

(अपास्तबाधाय नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)

ओं सांख्यस्मृतिविरोधजन्याक्षेपाबाधिताय नमः

विधिमतविरोधजन्याक्षेपाबाधिताय नमः

कार्यवैरूप्यजन्याक्षेपाबाधिताय नमः

एकार्थानेकतन्त्रोदितविहतिजन्याक्षेपाबाधिताय नमः

४० देहभोगावियुक्तिजन्याक्षेपाबाधिताय नमः

कार्योपादानभेदजन्याक्षेपाबाधिताय नमः

स्वहितविहतिजन्याक्षेपाबाधिताय नमः

कारकस्तोमहानिजन्याक्षेपाबाधिताय नमः

कृत्स्नांशाद्यूहबाधजन्याक्षेपाबाधिताय नमः

कृतिविफलताजन्याक्षेपाबाधिताय नमः १०

(द्वितीयाध्याय द्वितीयपादः)

(श्रितात्ताय नमः என்று ஒவ்வொன்றிலும் சேர்த்துக்கொள்ளலாம்)

कापिलस्थकृतोपरोधाविषयाय नमः

कणभुगनुगतकृतोपरोधाविषयाय नमः

वृद्धवैभाषिकादिकृतोपरोधाविषयाय नमः

योगाचाराभिधानकृतोपरोधाविषयाय नमः

५० ओं सुगतमतरहस्यशून्यवादकृतोपरोधाविषयाय नमः

अर्हत्सिद्धान्तभक्तकृतोपरोधाविषयाय नमः

पशुपतिमतस्थायिकृतोपरोधाविषयाय नमः

पञ्चरात्रसिद्धान्तप्रतिपाद्याय नमः ८

(द्वितीयाध्यायतृतीयपादः)

(अन्योन्यबाधास्पृष्टवेदप्रतिपाद्याय नमः என்றுவது
स्वात्मादेरुचितजननकृते नमः என்றுவது சேர்த்துக்கொள்ளலாம்)

व्योमादिकल्पकाय नमः

प्राच्यतत्त्वविशिष्टायोत्तरतत्त्वहेतवे नमः

जीवस्यौपाधिकप्रजननविलयहेतवे नमः

जीवस्य चिद्घनज्ञातृताप्रयोजकाय नमः

जीवस्य कर्तृतानिवर्तकाय नमः

जीवस्य परतन्त्रकर्तृतानिवर्तकाय नमः

६० स्वांशभूतजीववते नमः ७

(द्वितीयाध्यायचतुर्थपादः)

(இதிலும் முன்பாதப்ரகாரக்ரமமே சேர்த்துக்கொள்ளலாம்)

(इन्द्रियादेरुचितजननकृते नमः என்றுவது இருக்கலாம்)

अक्षजन्महेतवे नमः

ओं अक्षसंख्याव्यवस्थितिकृते नमः
अक्षपरिमाणकल्पकाय नमः
प्राणवायुस्वरूपपरिकल्पकाय नमः
प्राणाणुत्वप्रयोजकाय नमः
देवताजीवानां पारतन्त्र्येणाक्षाद्यधिष्ठानप्रयोजकाय नमः
प्राणानिन्द्रियत्वव्यवस्थापकाय नमः
स्वनाभिप्रभवकवचिताय बहुविधचिदचिद्व्यष्टिनामादिकर्त्रे पञ्ची
(तृतीयाध्यायप्रथमपादः) करणकर्त्रे नमः ८
(संसृतौ तन्त्रवाहिने नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)
स्थूलदेहात् जीवस्य भूतसूक्ष्मैः सहगमनप्रयोजकाय नमः
७० स्वर्गात् सानुशयस्य जीवस्य मात्रया भिन्नमार्गेणावरोह
प्रयोजकाय नमः
निरयगामिनां चन्द्रानाप्तिप्रयोजकाय नमः
अम्बरादिस्वाभाव्यापत्तिप्रयोजकाय नमः
अम्बरादितः शीघ्रावरोहप्रयोजकाय नमः
परवपुर्भूतव्रीह्यादियोगप्रयोजकाय नमः ६
(तृतीयाध्यायद्वितीयपादः)
(निर्दोषत्वादिरम्याय नमः என்று சேர்த்துக் கொள்ளலாம்)
स्वाप्नार्थहेतवे नमः
सुषुप्त्याधाराय नमः
सुप्तगोप्त्रे नमः

ओं मुग्धोद्बोधादिकर्त्रे नमः
अनघशुभगुणाय नमः
८० स्वदेहभूताचिद्भिरंशिने नमः
पारम्यस्यैकसीम्ने नमः
सकलफलदाय नमः ८
(तृतीयाध्यायतृतीयपादः)
(बहुभजनपदाय नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)
संयोगाद्यशेषप्रयुक्तैक्याश्रयविद्यावेद्याय नमः
उद्गीथविद्याद्वितयसंबन्धिने नमः
एकतापन्नप्राणविद्यासंबन्धिने नमः
सर्वपरविद्यानुयाय्यानन्दत्वादिधर्मवते नमः
प्राणवासस्त्वदृष्टिविधिसंबन्धिने नमः
एकतापन्नशाण्डिल्यविद्यासंबन्धिने नमः
व्यवस्थिताहरहमिति रहस्यनामघटितविद्याद्वयवेद्याय नमः
९० विद्याव्यवस्थितसंभृतिद्युव्याप्तिमते नमः
विभिन्नपुंविद्यासंबन्धिने नमः
अध्ययननियतशन्नेत्यादिमन्त्रसंबन्धिने नमः
परस्परसंश्लिष्टहान्युपायनप्रयोजकाय नमः
सांपराये हान्युपायनप्रयोजकाय नमः
सर्वविद्यानुयायिदेवयाननेत्रे नमः
सर्वविद्यानुयाय्यमलत्वास्थूलत्वादिमते नमः

ओं उषस्तिकहोलप्रश्नस्थप्राणितृत्वाशनायाद्यतीतत्वादिगुणोप-
पाद्यसर्वान्तरत्वविशिष्टैकविद्यावेद्याय नमः
एकत्वापन्नदहोपास्तिवेद्याय नमः
गुणफलविधिभूतोद्गीथोपासनसंबन्धिने नमः
१०० गुणार्थगुण्यावृत्तिमदुपासनवेद्याय नमः
निखिलपरतरोपास्तिवेद्यनिर्णयविषयीभूताय नमः
ज्ञानरूपक्रतुस्थविद्यारूपमनश्चित्संबन्धिने नमः
शुद्धक्षेत्रविषयोपासनवेद्याय नमः
क्रत्वङ्गभूतसर्वोद्गीथादिविषयोपास्तिसंबन्धिने नमः
सामस्त्यविशिष्टवैश्वानरविषयविद्यावेद्याय नमः
अनेकविद्यावेद्याय नमः
विकल्पितसर्वविद्यावेद्याय नमः
अनियतोद्गीथादिसंबन्धिने नमः २६

(तृतीयाध्यायचतुर्थपादः)

(स्वार्हकर्मप्रसाद्याय नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)
कर्माङ्गिकविद्यावेद्याय नमः
११० चोदितरसतमसुखधीसंबन्धिने नमः
स्वशेषभूताख्यानयुक्तविधिविहितविद्यावेद्याय नमः
स्वोचितकर्माङ्गिकोर्ध्वरेतोनुष्ठितविद्यावेद्याय नमः
यज्ञाद्यङ्गकगृहस्थकृतविद्यावेद्याय नमः
शान्त्यादियुक्तसर्वाश्रमिकृतविद्यावेद्याय नमः
ओं अनापदि विशुद्धान्नभोजिविद्वत्कृतविद्यावेद्याय नमः
विद्यार्थाश्रमार्थाभिन्नकर्मानुष्ठानकृद्विहितविद्यावेद्याय नमः
विधुरानुष्ठितविद्यावेद्याय नमः
आश्रमभ्रंशरहितानुष्ठितोपासनवेद्याय नमः
ऋत्विक्कृतोद्गीथाद्युपासनसंबन्धिने नमः
१२० विहितमननाङ्गकध्यानवेद्याय नमः
शक्त्यादिगोपनात्मकबाल्ययुक्तानुष्ठितविद्यावेद्याय नमः
बलवत्प्रतिबन्धकाभावसिध्यद्विद्यासंबन्धिने नमः
प्रबलप्रतिबन्धकाभावसिद्धन्मुक्तिफलकविद्यावेद्याय नमः १५

(चतुर्थाध्याय प्रथमपादः)

(पापच्छिदे नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)
असकृदावृत्तब्रह्मविद्यावेद्याय नमः
अहंब्रह्मेत्यनुसंधानविशिष्टविद्यावेद्याय नमः
अहमित्यनुसंधानशून्यप्रतीकोपासनसंबन्धिने नमः
उद्गीथादिविशेष्यकादित्यादिदृष्टिविधिसंबन्धिने नमः
आसनादियुक्तध्यानवेद्याय नमः
अप्रयाणादहरहर्निर्वर्त्यध्यानवेद्याय नमः
१३० विद्याधिगम एवोत्तरपूर्वाघाश्लेषविनाशकृते नमः
विद्यानुपयुक्तोत्तरपूर्वपुण्याश्लेषविनाशकृते नमः
आरब्धकार्यपुण्यापुण्यानुभवप्रयोजकाय नमः

ओं स्वोचितवर्णाश्रमधर्मानुष्ठाननिष्पाद्यविद्यावेद्याय नमः

प्रारब्धकर्मभोगावसान एव संपत्तिप्रदाय नमः ११

(चतुर्थाध्याय द्वितीयपादः)

(ब्रह्मनाडीगतिकृते नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)

मनसि वागादिसंपत्तिप्रयोजकाय नमः

प्राणे मनस्संपत्तिप्रयोजकाय नमः

अध्यक्षे प्राणसंपत्तिप्रयोजकाय नमः

सूक्ष्मभूतवर्गे अध्यक्षसंपत्तिप्रयोजकाय नमः

आसृत्युपक्रमाद्विद्वदविद्वत्साधारणोत्क्रान्तिप्रयोजकाय नमः

१४० भूतसूक्ष्मपरसंपत्तिप्रयोजकाय नमः

स्वस्मिन्नविभागापरपर्यायसंपत्तिप्रयोजकाय नमः

विदुषः ब्रह्मनाडीगतिकृते नमः

विदुषः रश्मिद्वारा नेत्रे नमः

निशि मृतस्यापि नेत्रे नमः

दक्षिणायने मृतस्यापि नेत्रे नमः ११

(चतुर्थाध्यायतृतीयपादः)

(अतिवहते नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)

ओं सर्वविद्यास्वेकरूपतयार्चिरादिगत्या नेत्रे नमः

देवलोकाभिन्नवायुघटितार्चिरादिगत्या नेत्रे नमः

तटितोऽधिवरुणघटितार्चिरादिगत्या नेत्रे नमः

आतिवाहिकाभिन्नार्चिरादिभिः नेत्रे नमः

१५० अप्रतीकालंबनानां नेत्रे नमः ५

(चतुर्थाध्याय चतुर्थपादः)

(साम्यदाय नमः என்று சேர்த்துக்கொள்ளலாம்)

अपवर्गे स्वाविर्भावप्रयोजकाय नमः

अपवर्गे निरुपाधिनियतस्वप्रकार्यन्तदृष्टिप्रयोजकाय नमः

अपवर्गे चिद्रूपस्यैव ब्राह्मगुणाविर्भावप्रयोजकाय नमः

सङ्कल्पादेव जीवस्य सर्वसिद्धिप्रयोजकाय नमः

जीवस्य नियमोन्मुक्ततनुप्रयोजकाय नमः

ओं स्वासाधारणलक्षणव्यतिरिक्तनिवृत्तिकथोज्झितस्वात्यन्तसाम्य

१५६ प्रदाय नमः

ओं शारीरकशास्त्रप्रतिपाद्याय नमः ६

ஸ்ரீ:

பெரியோர்கள் பக்கலில் (4)

சிற்சில ஸந்தர்ப்பங்களில் பெரியோர்களை நம திடம் தக்க காரணங்கள் பற்றி நாமே எழுந்த ருளச் செய்கிறோம். அவ்வேளைகளில் அவர் களை முகமன் கூறி 'ஸ்வாமிந: ஸ்வாகதம் வ:' என்று வரவேற்று கௌரவிக்கிறோம். அது சரியானதே. ஆனால் பற்பல காரணங்களில் பெரியோர்களே நாமிருக்குமிடம் தேடி வர நேருகிறது. அப்போது அவர்கள் பக்கல் பேச வேண்டிய விதம் எது? எது கூறினால் மரியா தையாக இருக்கும்? என்று நாம் சிறிது யோ சிக்கவேண்டும். 'நல்வரவாகுக' என்பதனால் அவர்களுக்குரிய மரியாதை செலுத்தப்பட்ட தாகுமா? அவர்கள் நம்மிடம் தேடி வருவது பற்றி நாம் எத்தகைய அதிர்ச்சியும், பரபரப் பும் அடையாமல், ஸஹஜமாகவே அதை எண்ணி, ஆனால் உதடுகளால் உபசாரமாக 'உங் கள் வரவு எனக்கு நன்மையைத் தருமாக' என்று கூட்டில் கூறினதாகவே அந்த ஸ்வாகத நிவேதநம் தலைக்கட்டும். இது அவர்களுக்குச் செய்யும் ஓர் அவமரியாதையே அல்லவா? இம் மாதிரி பெரியோர்கள் முன்கூட்டியே கூறாமல் கொள்ளாமல் திடுமென்று எழுந்தருளினால் பேசவேண்டிய விதத்தை வஸிஷ்டசிஷ்யனாய் இருந்து விஷயங்கள் பல கற்ற காகுத்ஸ்தன் தண்டகாரண்யத்தில் தமதிடம் தேடிவந்த தபோதனர்களை அழைத்துப் பேசும்போது அழகாக வெளியிட்டருளினான்.

(ப்ரஸீதந்து பவந்த:) தவம் செய்து மிக விளங்கும் வேதியர்களே! முந்தர முன்னம் அடியேனைப் பொறுத்தருளவேணும் என்றார் பெருமாள். 'இப்பொழுது என்ன வந்துற்றது எதைப் பொறுத்தருளவேணும்? அப்படி பொறுப்பதாயின் நீர் செய்த அபசாரத்திற்கு ஏதாகிலும் கண்ணழிவு உமது கையிலுண்டா? ஏதாயினும் ஓர் வ்யாஜத்தை இட்டன்றோ பெரி யோர்கள் பிழை பொறுப்பது' எனில் மேலும் பெருமாள் (ஹ்ரீரேஷா ஹி மமாதுலா) நான் செய்த பாபத்திற்கு மிகவும் வெட்கி வேதனை அடைகிறேன்' என்றார். செய்த அதிக்ரமங் களுக்கு ப்ராயச்சித்தம் அனுதாபத்திலேயே துடங்குகிறதல்லவா? செய்த பாவத்தைப் பல ரறிய நினைந்து உருகி வெளியிட்டு அனுதபித் தானேயாகில் எல்லோரும் அவனை ஆதரிக்கும் படி இருக்கும். உண்மையை ஆராய்ந்தால் மனிதஸமூஹத்தில் எக்காலமும் பாவமே செய் தறியாதவனைவிட ஓர் பொழுது செய்து மறு பொழுது மனம் கலங்கி அதற்காக மிக வருந் துபவனையே உலகம் மிகவாதரம் செய்யும். மனிதத் தன்மைக்கு அது ஒத்ததாயிருப்ப தால், அவனது இளகிய ஹ்ருதயமும் அதன் பரிசுத்தத்தன்மையும் தெளிவாக அப்பொ ழுது காணக் கிடக்கிறதன்றோ? எக்காலமும் பாபம் செய்ய நேராதவனை 'இவன் யத்தன்' என்று ஏசுவார்கள். 'தந்த்ரசாலி' என்று திரித்துக் கூறுவார்கள். ஆகையால் செய்த பாவத்திற்கு பச்சாத்தாபப்பட்டு கண்ணீர் உகுத்தவனிடம் எல்லோரும் ஈடுபடுவார்கள். வாலியை வீழ்த்தியபிறகு தாரை வந்து மரங் களும் இரங்கும் வகையில் புலம்பி வருந்த அதை அருகிருந்து பார்த்த ஸுக்ரீவமஹா ராஜர் துக்கமேலீட்டால் தேம்பித் தேம்பி அழுதபொழுது 'ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீர ஹந்தா ராம: முஹூர்த்தம் விமநா பபூவ' என்று ஆச்ரிதன் கண்ணீர் பொறுக்கமாட்டா மல் 'நாம் என்ன கார்யம் செய்தோமாக' என்று பெருமாளும் மனம் கலங்கி கண்ணீர் பெருக்கினார் என்று நாம் பெருமாளிடம் எவ் வளவு ஈடுபடுகிறோம். அவர் (பரவீரஹந்தா) சத்ருப் பூண்டுகளை கிழங்கெடுத்து வன்னிய மறுக்கும் பரமவீரன். அத்தகைய வீரச் செயல்களை அவர் செய்தார் என்றபோதுகூட நமது மனம் அவரிடம் அவ்வளவு ஈடுபாடு அடையவில்லை. 'ராம:' என்னும் பதம் அவ ருக்கு ஏற்பட்டுள்ள 'ராமன் கலங்காத மனத் தினன்' என்ற ப்ரஸித்தியைச் சொல்லுகி றது. 'த்வி: சரம் நாபிஸந்தத்தே த்வி: ஸ்தா பயதி ந ஆச்ரிதாந் । த்வி: ததாதி ச அர்த் திப்ய: ராமோ த்வி: நாபிபாஷதே ॥' ராமன்

முதலில் தொடுத்த அம்பு குறி தவறினதால் மறுபடி தொடுக்கலாயிற்று என்பதில்லை. தன்னை அடைந்தவனை ஆபத்திலிருந்து காக்க முயன்று, அது கூடாமல் போகவே மறுபடி அவனை ராமன் காக்க முயன்றார் என்பதும் இல்லை. யாசகர்கள் தன்னை நோக்கி வரும் பொழுதே அவர்கள் கற்பனைக்கும் எட்டாத அளவு அதிகமாக தானம் வழங்குபவர் ராமன் ஆகையால், மறுபடி அவர்கள் மன்றாட, மேலும் சில வழங்கினான் என்கிறதுவும் இல்லை; ராமன் சொன்ன சொல்லை அழித்து மறுபடி வேறு பேசினான் என்னவுமொண்ணாது. ஆகையால் 'மனவுறுதி மிக்கவர் ராமன்' என்று இதனால் தேறி நிற்கிறது. அத்தகையவரும் இன்று கலங்கினார் என்கிறபோது ஆச்ரிதர்க்காக அவர் படும் பாட்டை அனுஸந்தித்து ஆச்ரிதர்களாகிய நாம் ஸ்ரீ சக்ரவர்த்தித்திரு மகனின் திவ்யகல்யாணகுணங்களில் மனதைப் பறிகொடுக்கிறோம்.

ஆகையால் தான் செய்த தவறுக்குப் பின்பு வருந்துபவன் எவ்விதத்திலும் மன்னிக்கத்தக்கவனாதலால் என்னை க்ஷமித்தருளவேணும் என்று தண்டகாரண்யத்தில் மஹர்ஷிகளை வேண்டுகிறார் ராமன். 'அப்படித்தான் நீர் என்ன தவறிழைத்தீர் எங்களுக்கு? என்ன (யத் ஈத்ருசைரஹம் விப்ரை: உபஸ்தேயை: உபஸ்தித:) என்று பெருமாள் விண்ணப்பம் செய்கிறார். (ஈத்ருசை: விப்ரை:) ப்ராஹ்மணோத்தமர்களாகிய நீங்கள் மஹாமஹிமை பொருந்தியவர்கள். அவ்விதம் நீங்கள் இருப்பதும் என் பிசகன்று. (அஹம்) அடியேன் தாழ்மையின் எல்லை நிலம். அடியேன் இவ்விதம் இருப்பதும் என் பிசகன்று. அவரவர் படியில் அவரவர் இருந்துவிட்டுப்போகிறோம். (உபஸ்தேயை: உபஸ்தித:) நாம் ஒருவர்க்கொருவர் கலந்து பறிமாறுவதும் என் குற்றமன்று. ஆனால் மற்றவரால் சென்று அடையப்பட வேண்டிய நீங்களே கால்நோவ வழிநடந்து மற்றவரைச் சென்று கிட்டினீர்கள் என்றால் அது மற்றவரின் குற்றமேயன்றோ? ஆதலால் இந்த முறைப்பிசகை நீங்கள் பொருத்தருளவேணும் என்றும், உங்களில் நான் முன்னம் பாரித்து நீங்கள் இருக்குமிடம் தேடி வாராததுபற்றி நான் படும் க்லேசம் அளவிடக்கூடியதல்ல என்றும் பெருமாள் மஹர்ஷிகளிடம் வேண்டிக்கொண்டார் என்றால் இதிலிருந்து நாம் பெரியோர்களிடம் பேசிப் பழகவேண்டிய விதம் நன்கு தெளிவாகிறது.

இவ்விதம் பெரியோர்களை நாமிருக்குமிடத்தில் ஸந்திக்கும்போது பேசும் விதத்திற்கு சில உதாரணங்களைக்கண்டோம். இனி அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பும் விஷயத்திலும் சில புத்திமான்களுடைய சிந்தனை சென்றுள்ள விதத்தைக் காண்போம். இங்கு முதலில் ஒரு விஷயம் சொல்லுகிறேன். காதலியைக் கண்டு மயங்கிய காதலன் அவள் அழகு முகத்தை ஆர்வமுடன் அள்ளிப் பருகுகிறான். அதைப் பாசுரமிட்டுப் பேச ஆசை கொள்ளுகிறான். அம்முகத்தை எத்துடன் உவமித்துப் பேசலாம் என்ற ஆலோசனையில் அவன் இறங்கினபோது உலகில் கவிகள் முகத்திற்குக் கூறும் உபமானங்கள் எல்லாம் அவனுக்கு உபயோகமற்றவைகளாய்த் தோன்றுகின்றன. முகத்தை சந்த்ரமண்டலத்துடன் ஒப்பிட்டுப் பேசுதல் முகத்துக்கோர் களங்கமாகும். தாமரையுடன் உவமித்தால் முகம் வாட்டமுறும். ஸ்வர்ணபிம்பம் என்ற உபமானமும் உணர்ச்சியற்றது. ஆகையால் என்னவென்று வருணிப்பது? 'ஸுஜாதம்' ஸுந்தரம், என்பதுபோல் 'மிகவழகிய முகம் என்றுதான் கூறவேண்டும். குற்றம் யாதுமில்லை என்று காதலன் தீர்மானித்தான் என்று ஓர் கவி கூறுகிறான். அது போல் ஒரு போது ஸ்ரீகண்ணனை தர்மபுத்ரர் பிரியாவிடை கொடுத்தனுப்ப நேர்ந்தது. அந்த ஸமயம் தர்மபுத்ரரின் மனத்திரையில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தனவாம். (இதி ஆலோச்ய பஹு ப்ரதர்க்கம் அவதத் க்ருஷ்ணம் து தர்மாத்மஜ:) எவ்விதம் பேசி விடை கொடுப்பது இச்சமயத்திற்கு ஏற்றது என்று யோசித்தார். மாகா:- என்னை விட்டுச் செல்வது முறையோ? க்ருஷ்ணா! உனக்கு. ஆகையால் என்னை விட்டுச் செல்லாதே என்பது போன்றவைகள் அமங்களமான சொற்கள். வ்ரஜ- போய் வா என்று மங்களமாகச்

சொன்னோமாகில் அதிலும் ஓர் ஊனம் இருக்கிறது. மனதில் அன்பில்லாமல் போகச்சொன்னான் என்பதாகப் பக்கலிலுள்ளவர்களுக்குப் படும். கச்ச – செல் என்று சுருங்கச் சொல்லுவோமென்றால் அதிலும் ஆபத்து இருக்கிறது. 'இது என்ன ராஜாவின் ஆஜ்ஞை போலுள்ளதே' என்பார்கள் அருகிருப்பவர்கள். இவ்விதங்களில் ஒன்றும் வேண்டாம். இப்படிச் சொல்லுவோம். 'யதா இச்சஸி ததா குரு' தேவரீருக்குத் திருவுள்ளந்தோன்றினபடி செய்யலாமே. அடியேன் அவ்விடத்திற்கு அடிமையன்றோ? அடியேனைக் கேழ்க்க வேணுமோ? என்று தர்மபுத்ரர் சொல்ல நினைத்தார். அதிலும் ஓர் குறை இருப்பதாக அவருக்குத் தோன்றியது. கண்ணனுடைய புறப்பாட்டில் தான் உதாஸீனமாக இருப்பதாகப் புலப்படுமே. தமயந்தியிடம் அவளை ஊருக்கு அனுப்பும்போது நளன் 'இது விதர்ப்பதேசம் செல்லும் வழி. அது கோஸலம் புகுரும் பாதை என்று தன் நடு நிலைமை தோன்ற 'எங்காவது செல்லட்டும்' என்று விருப்பின்றிக் கூறினதாகச் சொல்வர். அது போல் ஆகுமல்லவா? இதுவும். ஆகையால் எவ்விதம் கூறினால் இத்தருணத்திற்கு ஏற்றவாறு இருக்கும்? என்று யோசித்துத் தர்மபுத்ரர் கடைசியில், 'ஸ்மர்த்தவ்யா வயம் ஆதரேண பவதா யாவத் புநர்தர்சநம்' என்று கண்ணனிடம் விண்ணப்பித்தார். மறுபடி தேவரீர் சீக்கிரத்திலேயே ஸேவை ஸாதித்தருளவேணும். அதுவரை அடியோமை மறந்தொழியாதிருக்கவேணும். அன்புடன் அவ்வப்போது நினைத்தருள்க என்று வேண்டினார். இதில் இவ்விதம் ப்ரார்த்திப்பதில் எவ்விதமான ஔசித்யக் குறைவும் இல்லையல்லவா? ஆகையால் பெரியோர்களை விட்டுப் பிரியும் போது இவ்விதம் உபசாரமாக மொழிவது சாலப் பொருத்தமுடையது.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[ஹேவிளம்பி ௵ உத்தராயணம் - வஸந்தருதுமேஷ ௴ 1957 ஏப்ரல் – மே ௴]

13-4-57	சித்திரை ௴ 1௳	சனிக்கிழமை	மேஷரவி 15-31 விஷு; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி; தமிழ்வருஷப்பிறப்பு.
14-4-57	2௳	ஞாயிற்றுக்கிழமை	○ பூர்ணிமை; சூன்ய திதி.
25-4-57	13௳	வியாழக்கிழமை	ஏகாதசி.
26-4-57	14௳	வெள்ளிக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 5-19. பூரட்டாதி; **32**-வது பட்டம் ஸ்ரீவீரராகவ யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்.
29-4-57	17௳	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை.
4-5-57	22௳	சனிக்கிழமை	திருவாதிரை ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் திருவுள்ளூர் சைத்ரோத்ஸவாரம்பம்
5-5-57	23௳	ஞாயிற்றுக்கிழமை	புநர்வஸு **24**-வது பட்டம் ஸ்ரீபராங்குசராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
6-5-57		திங்கட்கிழமை	திருவுள்ளூர் கருடோத்ஸவம்.
8-5-57	26௳	புதன்கிழமை	நவமி, தசமி திதித்வ்யம்
9-5-57	27௳	வியாழக்கிழமை	ஏகாதசி திதி.
10-5-57	28௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி வ்ரதம். திருவுள்ளூர் திருத்தேர்.
12-5-57	30௳	ஞாயிற்றுக்கிழமை	மேஷ சுக்ல சதுர்தசி திதி. ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தீ சித்திரை ஸ்ரீமதுரகவியாழ்வார், **29**-வது பட்டம் ஸ்ரீ பராங்குசராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம். திருவுள்ளூர் தீர்த்தவாரி.

13-5-57 31வ திங்கட்கிழமை பூர்ணிமை திதி○. சந்த்ரகிரஹணம். திருவுள்ளூர் கண்ணுடிப்பல்லக்கு

[வஸந்தருது வ்ருஷப மீ வைகாசி மீ]

14-5-57 வைகாசி மீ 1வ செவ்வாய்க்கிழமை வ்ருஷபரவி 11-3 விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
15-5-57 2வ புதன்கிழமை வ்ருஷபக்ருஷ்ண த்விதீயை திதி
21-5-57 8வ செவ்வாய்க்கிழமை அவிட்டம் 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவவேதாந்த யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
22-5-57 9வ புதன்கிழமை நவமி திதி.
23-5-57 10வ வியாழக்கிழமை அதிதி.
24-5-57 11வ வெள்ளிக்கிழமை தசமி திதி.
25-5-57 12வ சனிக்கிழமை ஏகாதசி
27-5-57 14வ திங்கட்கிழமை பரணி, 39-வது பட்டம் ஸ்ரீபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
28-5-57 15வ செவ்வாய்க்கிழமை போதாயன அமாவாஸ்யை
29-5-57 16வ புதன்கிழமை ●அமாவாஸ்யை.

குறிப்பு:— 1. நாளது ஸம்வத்ஸரத்தை பொதுவாக 'ஹேவிளம்பி' என்று பஞ்சாங்கங்களில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் பூர்வாசார்யர்கள் 'ஹேமலம்பி' என்றுதான் வ்யவஹரித்திருக்கிறார்கள் என ப்ராசீன க்ரந்தங்களிலிருந்து தெரிகிறது.

2. சித்திரை மீ 2வ ஒரு பௌர்ணமி திதியும் 31வ ஒரு பௌர்ணமி திதியும் ஸம்பவிக்கின்றன. இரண்டாவது திதியில் வைதிககர்மாக்கள் செய்வதும் முதல் திதியை சூன்ய திதியாகக் கருதுவதும் சாஸ்த்ரீயமுறை. இவ்வருஷம் இம்மாதம் 31வ ஸம்பவிக்கும் பௌர்ணமி திதியன்று க்ரஹணம் ஸம்பவிப்பதால் இந்த திதி தோஷமுள்ளதாகவும், ஆகவே 2வ பௌர்ணமியே சரியான திதியாகவும் சிலர் நினைக்கலாம். ஆனாலும் 31வயன்றே பௌர்ணமி திதியையநுஷ்டிக்கவேண்டும். அன்று அர்த்த ராத்திரிக்குப் பிறகு க்ரஹணம் ஸம்பவிப்பதால் பகலில் மூன்று ஜாமங்கள் போஜனம் செய்யலாம். ச்ராத்தமும் அன்று செய்து அந்த காலத்திற்குள் போஜனம் செய்யவேண்டும். இது சாஸ்த்ர ஸம்மதமே.

3. பல பஞ்சாங்கங்களை நாங்கள் பார்த்து திதி, நக்ஷத்ரங்களின் நாழிகைகளை மட்டில் தீர்மானித்துக்கொள்ளுகிறோம். ஆனால் எந்த தினங்களின் திதிகளில் ஸம்பந்தமான வைதிககர்மாக்களைச் செய்யவேண்டும் என்ற விஷயங்களை பல தர்மசாஸ்த்ர க்ரந்தங்களைப் பார்த்து பர்யாலோசனை செய்தும் ப்ராசீன ஸம்ப்ரதாயங்கள் தெரிந்த சாஸ்த்ரஜ்ஞர்களைக் கண்டு, கேட்டு, ஆலோசித்தும் தீர்மானம் செய்கிறோம். ஆகவே இந்த பஞ்சாங்க ஸங்க்ரஹத்தில் ஸந்தேஹம் ஏற்பட்டால் எங்களுக்குத் தெரிவித்து பர்யாலோசனை செய்து தீர்மானத்திற்கு வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸம்பாதகர்.

Let not your automobile
be stranded for want of
any spares at any time

THE BANGALORE AUTOMOBILES

DIRECT IMPORTERS

Trichy Road, Salem - 1.

Post Box No. **13.** *Grams:* **SPARES:** *Phone:* **112.**

BIGGEST IMPORTERS
of Parts and Accessories of
all Popular Cars and Trucks

SPECIALISTS
IN
**PERKINS DIESEL
ENGINES
&
PARTS**

Regd. No. M. 4437.

போன் நெ. 112.

காஞ்சீபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்
வாங்க நம்பிக்கையான இடம்
புதிய ஜவுளிக்கடை

***

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,

184. காந்தி ரோடு, காஞ்சீபுரம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 200—0—0
அரை [illegible]த்திற்கு		ரூ 100—0—0
உள்பக்கங்களில்:	ஒரு பக்கம் ஒரு தடவைக்கு	ரூ 15—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 150—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 75—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.